# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group I தேர்வு

பாடம் : தமிழ் சமூகம்

பகுதி : **தமிழர் சமயமும் பண்பாட்டு நெறிமுறைகள் - சைவம், வைணவம்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 1 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை**

# தமிழர் சமயமும் பண்பாட்டு நெறிமுறைகள்

## சைவம், வைணவம்

**பழந்தமிழர்களின் சமூக வாழ்க்கை நிலைகள்**

உலக இனங்களுள் தலைசிறந்த நாகரிகம், பண்பாடுகள் கொண்ட தமிழ் இனத்தின் மேனாள் வாழ்வியல் நிலைகளை ஆய்வோம்.

**திணை வழிபாடு**: மலை நிலத்தவர் முருகனையும், வனப் பகுதியினர் திருமாலையும், வயற்புறத்தினர் இந்திரனையும், நெய்தல் சார்ந்தோர் வருணனையும், வறண்ட நிலத்தவர் கொற்றவையும் என நிலம் சார் வழிபாட்டு முறைகளை மேற் கொண்டனர்.

நடுகல் வழிபாடு, இயற்கை அச்சம், சூரிய சந்திரர், நெருப்பு என அவர்கள் வழிபட்டனர். தத்தம் இல்லத்தில் மறைந்த முன்னோரைத் தென்புலத்தார் ஆகக் கருதி வழிபடும் மரபினர், தமிழர்கள்.

**விழாக்கள்:** தை முதல் நாள், தைந்நீராடல், கார்த்திகை, திருவாதிரை, பங்குனி உத்திரம், இந்திர விழா, வேலன் வெறியாட்டு, குன்றுதோறாடல் எனப் பழந்தமிழரின் விழாக்காலங்கள் தமிழ் மாதங்களுடன் உறவாடின. அகநானூறு, கலித்தொகை, பரிபாடல் போன்றவை இவற்றைப் படம் பிடிக்கின்றன.

**பழக்க வழக்கங்கள்!:** தீ முட்டக்கல்லை உரசுதல், நிலவு, ஞாயிறு, விண்மீன்கள், மலர்களின் மலர்ச்சி எனக் காலமறியக் கண்டறிந்துள்ளனர். “குமரிக் கொண்டை பூமணம் அறியாது” என்பார் டாக்டர். வ.சுப.மாணிக்கம். சங்ககாலக் கன்னியர் மலரணிதல் வழக்கமில்லை; சிலம்பணிந்தனர். சிறு இல்ல விழா “சிலம்பு கழி நோன்பு ஆகும். சிறுவர்கள் ஐம்படைத்தாலி என்ற அணிகலன் அணிந்தனர். இறந்தோரைப் பெருங்குடமாம் தாழியில் இட்டுப் புதைத்தனர். இல்லம் வந்த விருந்தினரை வழியனுப்புகையில் வாசல் வரைப் பின் சென்று வாழ்த்தியனுப்பினர்.

**ஆடையணி வழக்கம் :** ஆடவரின் மேற்சட்டை "கஞ்சுகம்" ஆகும். சட்டையின்றேல் துண்டினைத் தோளில் இட்டனர். ஆவியன்ன, புகை போன்ற சேலைகளைப் பெண்கள் அணிந்தனர். மிக மெல்லிய இழைகளால் ஆன புடவைகள் விரும்பிப் பெண்களால் அணியப் பெற்றன. ஆடை தைப்பவர் "துன்னக்காரர்" ஆவார்.

**அணிகலன்கள்:** பெண்கள் தங்கள் அழகுக்கு அழகு செய்ய சிலம்பு, மேகலை, குழை, கணையாழி, கடகம், ஒட்டியானம், மெட்டி, சுட்டி அணிந்தனர்.

**விளையாட்டுகளும் பொழுது போக்குகளும்:** முல்லை நில ஆடவர், "ஏறு தழுவுதல்" என்ற வீர விளையாட்டில் சிறந்தனர். மற்போர் புரிதல் மற்றொன்று. சேவற் சண்டை, ஆட்டுக்கிடாய்ச் சண்டை, யானைச் சண்டை காணல் பழந்தமிழரின் பொழுது போக்கு விளையாட்டுகள்.

அம்மானை, கழங்காடல், பொய்கை நீராடல், பூப்பந்தாட்டம் மகளிரின் ஆடல்கள். ஆற்று நீரில் துடும் எனக் குதித்தல். ஓரையாடல் போன்ற சிறுவர் விளையாடல்கள் உண்டு.

**உணவு**: நிலவழி உணவு முறைகள் வேறுபட்டன. நெல்லரிசி பொதுவான உணவு. காய்கறிகள், பழங்கள், மாமிசம், மீன், திணை, தேன், பால், புளிப்பாகர், வரகு, பழந்தமிழர்களின் உணவுப்பழக்க வழக்கம் ஆக இருந்தது.

**திருமண முறை:** மணமகன் மணமகளுக்குப் பரிசம் தரும் வழக்கம் இருந்துள்ளது. மணமக்கள் திருமணத்தன்று புத்தாடையணிந்தது பொலிவு பெற்றனர். முதிய பெண்கள் மணமக்களை நெல்லுடன் மலர், புனித நீர் தூவி வாழ்த்தினர். மணமுழவு ஒலிக்கப்பட்டது. திங்கள் உரோகிணி கூடிய நன்னாள் திருமண நாளாகக்கு குறிக்கப்பட்டது.

**தொழில்கள்:** உழவு, வணிகம் முதன்மை பெற்றன. சமூகத்திற்குத் தேவையான தச்சு, கொல்லுத் தொழில், நகைகள் செய்தல், நிலம் சார் சிறு தொழில்கள், வேட்டையாடல், நெசவு, உப்பு வணிகம் பரவியிருந்தது. "நெல்லும் உப்பும் சமநிலை பெற்றன. பண்டமாற்று (Barter System) நாணய முறையாக இருந்தது.

கல்வியும் கவின் கலைகளும் சமூகத்தில் பரவியிருந்தன. "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற உலகக் குடும்பம், சகோதரத்துவம் பெற்ற சமூகம், பழந்தமிழரின் மன்னராட்சிக் காலத்தில் தழைத்திருந்தது!

**பழந்தமிழரின் சமூக வாழ்க்கை நிலைகள்**

பழந்தமிழரின் வாழ்வியலில் களவும் கற்பும் நிறைந்திருந்தன. காதல் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகிலும், அது திருமணத்தில் இனிது நிறைவேறுவதையே விரும்பினர். ஊரறியத் திருமணம் செய்து வாழும் செவ்வியல் நிலை போற்றப்பட்டது.

இல்வாழ்வில் கணவர்கள் பொருள்தேடவும் போருக்காகவும் பிரிந்தனர். நெடிதுநாள் கழித்து இல்லம் திரும்பினர். ஊரார் பழிச்சொல்லிற்கு அஞ்சிக் காதலர் இருவரும் கற்பு மேம்பட உடன்போக்கு மேற்கொண்டனர்.

ஒரு தாய் கட்டுப்பாடின்றி வெளியிற் செல்லும் தன் மகளை இல்லத்தில் செறித்துக் கண்டிக்கும் வழக்கமும் இருந்துள்ளது.

திருமணம் செய்யப் பொருத்தம் பார்க்கும் வழக்கம் இருந்துள்ளது. இன்று ஜாதகப் பொருத்தம் பார்க்கும் நிகழ்வைப் போல அன்றும் தமிழரிடையே "பிறப்பு, குடிமை ஆண்டு" எனப் பத்துவகைப் பொருந்துதல்களைத் தமிழர் ஆராய்ந்துள்ளனர்.

குழுக்களின் அடிப்படையிலான பிரிவுகளில் தொழில் சார்ந்த சமூகமாகச் சங்ககாலமக்கள் விளங்கினர்.

திருமண நிகழ்வு மறையவர் வழிகாட்டலில் நடத்தமைக்கான சான்றுகள் இல்லை. கி.பி. 958 இல் தான் தாலியணியும் வழக்கம் பற்றிக் கல்வெட்டுச் சான்று கிடைக்கின்றது.

முதுமகளிர் புனிதநீரை மலருடன் மணமக்கள் மேற்தெளித்து வாழ்த்தினர். தூய ஆடை, அணிகலன்களுடன் மணமகள் பொலிவுற்றாள்.

சிலம்புகழி நோன்பு - திருமணத்திற்கு முன்பு மணப்பெண் சிலம்பினை அகற்றுதல் ஒரு விழாவாகவே எடுக்கப்பட்டுள்ளது.

தொழில்வழிப் பொருளியல் – உள்ளூர்த் தொழில்வழி எக்குறையும் இன்றிச் சங்ககால மக்கள் பண்டமாற்று மூலமாக வணிகம் செய்தும், தொழில்கள் செய்தும் தங்கள் வாழ்வாதாரங்களுக்கு வழிதேடிக் கொண்டனர்.

நாகரிக அகழாய்வுகள் மூலம் 2600 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்மக்களின் நகர வாழ்வியல் தெளிவாகத் தெரிய வருகிறது.

**பண்டைத் தமிழரின் அயலக வணிகத் தொடர்புகள்**

கடற்காற்றை ஆளும் திறன்படைத்த தமிழர்கள் கடல்வழி வணிகத்தில் கரை கண்டனர். பழந்தமிழரின் வணிகத் தொடர்புகளைக் காண்போம்.

1. கி.மு. 1000 ஆண்டில், அராபிய இளவரசி ஷீபா, இசுரேல் மன்னன் சாலமனுக்குத் தமிழகத்தின் முசிறியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நறுமணப் பொருட்களைப் பரிசளித்தாள்.
2. டையர் மன்னன் ஹீரம் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை முசிறியிலிருந்து தங்கம், வெள்ளி, தந்தம், அகில் போன்றவற்றை இறக்குமதி செய்தான்.
3. பாபிலோனியாவின் நிப்பூரில், முரஷு அவர் மகள்கள் தமிழர்களுடன் செய்த வணிகக் கணக்குப் பதிவேடுகள் கிடைத்துள்ளன.
4. தமிழக நறுமணப் பொருட்கள் ஏடன்குடா வழியாக எகிப்துக்குச் சென்றமையை பெரிப்ளூஸ் நூல் தெரிவிக்கிறது.
5. கி.மு.4000இல், சுமேரியாவின் நிலாக்கோயிலில், சேர நாட்டிலிருந்து தருவிக்கப் பட்ட தேக்குமரத் துண்டு கிடைக்கப் பெற்றுள்ளது.
6. ஸ்ட்ராபோ, பெரிப்ளூஸ், பிளைநி ஆகியோர் மூலம், ரோமானியரின் தமிழர் தம் மூலிகையறிவு வெளிவரலாயிற்று.
7. அரேபியா, கிரீஸ் நாட்டுச் சரக்குக் கப்பல்கள் முசிறியில் நங்கூரம் இட்டதைப் பெரிப்ளூஸ் நூல் பேசும்.
8. ஹிப்பாலஸ் பருவக்காற்றில் மூலம் கிரேக்கக் கப்பல்கள் முசிறி வந்துள்ளன.

9. அரிக்கமேடு அகழாய்வு, தமிழர் – உரோமானியரின் வணிகத்தொடர்புகள். நாணயங்கள், ரோம் நாட்டவர் அங்காடிகளைக் காட்சிப்படுத்தின.
10. சிந்தனையாளர் ஹிப்பாக்ரட்டஸ், மிளகை இந்திய மருந்து என்கிறார்.
11. பிற்காலப் பாண்டியர் காலத்தில், வெனிஸ் பயணி மார்கோ போலோ மதுரை வந்துள்ளார். மதுரையை "விழாநகரம்" என்பார்.
12. உலக அழகி கிளியோபாட்ரா கொற்கை முத்துகளால் தன்னை அழகு செய்தாள்.

இவை போன்ற ஏராளமான சான்றுகள் பழந்தமிழரின் மேற்குத் தொடர்புகளை வணிகரீதியாகக் காட்டுகின்றன.

இதுகாறும் கண்ட உண்மைகளால், கிறித்து பிறப்பதற்குப் பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே தமிழர் மேற்கே கிரீசு, ரோம், எகிப்து முதல் கிழக்கே சீனம் வரையில் வணிகத் தொடர்பு கொண்டிருந்தமை தெரியவரும்.

பெரிப்புளுசு நூலைப் பதிப்பித்த W.H. ஸ்காப் என்பவர். "கிரேக்க மக்கள் அநாகரிகத்திலிருந்து விழித்தெழுவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எகிப்தும் பண்டைய இந்திய நாடுகளும் வாணிகத் தொடர்புகள் கொண்டிருந்தன" என்கிறார்,

சாய்ஸ் எனபவர் கருத்துப்படி தென்னகம்-சுமேரியர் தொடர்பு கி.மு. 4000 ஆண்டுகட்கு முற்பட்டது ஆகும்.

மடகாஸ்கருக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையே நடந்த வணிகத்தினால் அங்கே தமிழர் குடியேற்றம் ஏற்பட்டது.

கிரேக்கர்கள் கி.மு. 5 ஆம் நூற்றாண்டிலிருந்தே வணிகம் தொடர்பான நடவடிக்கைகளைத் தமிழருடன் மேற்கொண்டனர்.

கி.மு.1000 அளவில் சீனத்தோடு வாணிகம் தொடங்கியதால், கி.மு. 7ம் நூற்றாண்டில் தமிழகப் பொருட்கள் சீனத்தில் விற்கப்பட்டன.

மெகஸ்தானிஸ் தனது "இண்டிகா" வில் பாண்டி நாட்டு முத்துகளைப் பாராட்டுகிறார்.

சாணக்கியரோ, சிந்துவெளி கம்பளி, தோல் முதலான மலிவான பொருள்களை அனுப்பியதாகவும் தென்னாடோ முத்து, வைரம், தங்கம் என விலைமதிப்பற்ற பொருள்களை அனுப்பியதாகவும் கூறுகிறார்.

பதிற்றுப்பத்து கப்பலில் வந்திறங்கிய பண்டங்கள் வைக்கப்பட்ட "பந்தர்" பற்றிப் பேசுகிறது.

உரோமர்கள் பாண்டிய நாட்டு அரசர்களிடம் அலுவல் பார்த்தனர்.

யவனரின் குடியிருப்பொன்று பாண்டிச்சேரி அருகே கண்டுபிடிக்கப்பட்டது. இடைக்காலத்தில் நானா தேசியத் திசையாயிரத்து, ஐநூற்றுவர், வளஞ்சியர், மணிக்கிராமத்தார் என்ற வணிகக் குழுக்கள் மூலம் கடல் வணிகம் செழிப்புற நடைபெற்றமையைக் கல்வெட்டுகளால் அறிகிறோம்.

**பல்வேறு காலகட்டங்களில் பெண்களின் சமூக நிலைகள்**

**சங்க காலம்:** நூற்றுக்கும் மேற்பட்ட திறன்மிக்க புலவர்கள் வரிசையில் முப்பதுக்கும் மேற்பட்ட பெண்கவிஞர்கள் விழுமிய கருத்துகளை உரைத்ததன் மூலம் பெண்கல்வியின் பண்டைச் சிறப்பினை அறியலாம். "எவ்வழி நல்லவர் ஆடவர்".

"தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே" என்ற பெண் கவிஞர்களின் கூற்றுகளே இதற்குச் சான்று.

"வினையே ஆடவர்க்கு உயிர் வாள்நுதல்

மகளிர்க்கு ஆடவர் உயிர்" என்ற கற்புநிலை மேம்பட்ட பெண் சமூகம் நிலவியது. எனினும் விலைமகளிர் என்ற பிரிவும் இருந்தமை தெளிவு.

**இடைக்காலம்:** சமணம், பௌத்தம் என்ற புறச்சமயங்களின் தாக்கத்தால் சங்கத்தில் இருந்த பெண்கள் நிலை சற்றே குறைந்தது. பெண்கள், மோட்ச உலகிற்குத் தடையாய் இருப்பர் என்பது சமணர்களின் கொள்கை. சமண, பௌத்த நூல்கள் பெண்களைத் தரக்குறைவு செய்தன. இனியவை நாற்பது பெண்களை விடம் என்றது. சமூகத்தில் கோயில்களில் "தேவரடியார்" என்ற

பெண்கள் தொண்டூழியம் செய்ய அனுமதிக்கப் பட்டனர். பலதாரத் திருமணம், சதி, குழந்தைத் திருமணம், கைம்பெண் நோன்பு ஆகியன சமூகத்தில் நிலவின.

**சோழர் காலம்:** அரச குடும்பப் பெண்கள் அடைந்த உயர் நிலைத் தகுதியைப் பொது மக்களில் உள்ள பெண்கள் அடைந்தமைக்குச் சான்றுகள் இல்லை. இடைக்காலத்தில் நிலவிய பெண்களின் நிலை சோழர்காலத்திலும் தொடர்ந்தது. தஞ்சைப் பெரியகோயிலில் 400 தேவரடியார்கள் பணியாற்றினர். அவர்களின் வாழ்வாதாரத்திற்கு அரசு மானியமும் நிவந்தங்களும் அளித்தது.

**நாயக்கர் காலம்:** பழைமைவாத நாயக்கர்கள் ஆட்சியில் விதவைப் பெண்கள் கொடுமைக்கு ஆளாயினர். மணவிலை, ஒரே இனக் கொள்வினை – கொடுப்பினைகள், தேவதாசி முறை, அரசரின் அந்தப்புரங்களில் பெண்கள் அடைக்கப்பட்டமை இக்காலத்தில் பெண்களின் நிலையை இரண்டாம் நிலைப்படுத்தியது.

**பிரிட்டிஷார் காலம்:** கிறிஸ்துவ மெஷினரிகள் வருகை. திராவிட இயக்கங்களின் தோற்றம், டாக்டர் முத்துலெட்சுமி, டாக்டர் தர்மாம்பாள், மூவலூர் இராமாமிர்தம் அம்மாள் ஆகியோரின் தன்னலமற்ற தியாகம் போன்றவற்றால் பெண்கள் படிக்கத் தொடங்கினர். டாக்டர் முத்துலெட்சுமி அவர்கள் ஆதரவற்ற பெண்களுக்கென அடையாறில் "ஒளவை இல்லம்" தொடங்கினார்.

**தற்காலத்தில்** உலகமயம், தனியார் மயம், தளர்வியம் ஆகிய தாராளமயக் கொள்கையால், பெண்கள் ஆண்களைவிடக் கல்வியில் மேம்பட்டு இன்று தனியார் – அரசு – பொதுத்துறை நிறுவன ஊழியர்களாகவும், அயலகம் சென்று பணியாற்றும் திறன் பெற்றவர்களாகவும் வளர்ந்துள்ளமை தெளிவு!

தமிழக மகளிரின் சமூகநிலைகளில், சங்ககாலம் கல்வியில் அவர்களுக்குச் சுதந்திரம் அளித்திருந்தது. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற அணிகலன்களால் அவர்கள் சிறந்திருந்தனர். "முளிதயிர்ப் பிசைந்த காந்தள்மென் விரல்" என்ற சங்கப்பாடல். பெண், குடித்தனம் பேணலைச் சிறப்பித்துக் கூறுகிறது,

எழுவகை அகவைப் பிரிவுகளில் பெண்கள் நிலைப்படுத்தப்பட்டனர்.

பெண்கல்வியிற் ஔவையார், நப்பசலையார், வெண்ணிக் குயத்தியார், பொன்முடியார், வெள்ளி வீதியார் போன்றோர் பாடல் இயற்றும் பான்மையிற் சிறந்தனர்.

அதியனுக்கும், தொண்டைமானுக்கும் இடையே நடக்கவிருந்த மறப்போரைத் தவிர்க்கத் தூது நடந்த மூதாட்டியாக ஔவை தலை நிமிர்கிறாள்.

ஒருவனுக்கு ஒருத்தி என்ற கற்புக் கோட்பாடு சிறந்து நின்ற போதிலும், பரந்தையிற் பிரிந்த ஆடவரைப் பெண்கள் சகித்திருந்தனர்.

விருந்தோம்புதலிற் பெண்கள் தலைசிறந்து நின்றனர்.

கணவனை இழந்த பெண்கள் துன்புற்றனர். தலையை மழித்தலும், வளையல் முதலிய அணிகளை நீக்கி விடுதலும், பூவை விலக்குதலும், எளிய உணவினை உண்ணுதலும் பாயின்றிப் படுத்தலும் ஏற்றனர்.

பிறநாடுகளில் தோன்றிய பரத்தமைத் தன்மை, தமிழ்நாட்டிலும் எல்லாக் காலங்களிலும் இருந்தே வந்துள்ளது. செல்வ ஆடவர் அவர்தம் கூட்டுறவை விரும்பினர்.

விளையாட்டுகளைப் பொறுத்தவரை வட்டாடல், புனலாடல், கழங்காடல், ஓரையாடல் முதலிய விளையாட்டுகள் பெண்களுக்கென இருந்துள்ளன.

பிற்காலம் :- பிற்காலச் சோழர்காலத்தில், சமூகத்தில் திருக்கோயில் ஆடல்-பாடல் மங்கையர்களாக ஒப்புக் கொடுக்கப்பட்ட மகளிர், தேவரடியார் என்ற தகுதியுடன் அரசுச் சலுகைகள் பெற்றுள்ளனர். இராஜராஜ சோழனின் ஆட்சியில், 400 தேவரடியார் தஞ்சைப் பெரிய கோயிற் பணியில் இருந்துள்ளனர்.

இக்காலம் :- ஆங்கிலேயர் வருகைக்குப்பின்னர் பொதுமைப்படுத்தப்பட்ட கல்விமுறையினால் பெண்கள் பயின்று பட்டம் பெற்றுப் பல்வேறு

பணிகளுக்கும் சென்று உயர் அலுவலர் ஆகவும் நிர்வாகிகள் ஆகவும் விளங்குவது வெள்ளிடைமலை!

**உத்திரமேரூர் கல்வெட்டு கூறும் குடவோலைத் தேர்தல் – தகுதிகள் - முறைகள்**

முதலாம் பராந்தக சோழன் காலத்து உத்திரமேரூர்க் கல்வெட்டு கூறும் ஊராட்சித் தேர்தலில் போட்டியிடுதற்கான தகுதிகள்:- ஒவ்வொரு ஊரும் 30 குடும்புகளாகப் பிரிக்கப்பட்டு, உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டனர்.

1. போட்டியிடுபவர், ½ காணி நில உரிமையுடையராதல் வேண்டும்.
2. சொந்த மனை, வீடு உடையவர்
3. 30 – 60 வயது வரம்பு
4. வேத – சாஸ்திர அறிவு
5. பொதுப்பணியில் ஆர்வம்
6. நேரிய வழி சம்பாத்தியம்
7. மேனாள் உறுப்பினர் அல்லார்
8. ஓய்வு பெற்ற உறவினர் அல்லாதார் ஆகிய தகுதிகளை நிறைவு செய்தவராக இருத்தல் வேண்டும்.

**தேர்தல் முறை:**

1. விருப்பமுள்ள போட்டியாளரின் பெயரைப் பனையோலையில் எழுதிப் பானையில் இடல்.
2. பொதியிலில் மக்கள் கூடுவர்
3. குடும்பின் வாக்குகள் கட்டுகளாகக் கட்டப்பட்டு பானைக்குள் இடப்படும்.
4. சிறுவன் ஒருவன் ஒரு கட்டினை எடுப்பான்.
5. அக்கட்டு பிரிக்கப்பட்டு இன்னொரு பானையில் இடப்படும்
6. சிறுவன் ஒரு வாக்கு ஓலையைத் தேர்வான்
7. ஓலையிலுள்ள பெயர் உரக்கப் படிக்கப்படும்.

- இவ்வாறே 30 குடும்பங்களுக்கும் உறுப்பினர் தேர்வு செய்யப்படுவர்.

**ஊர் நிர்வாகம்:**

30 உறுப்பினரில், 12 பேர் தோட்ட வாரியம் காப்போர், 6 பேர் ஏரி வாரியத்தார். பஞ்ச வாரியம், பொன் வாரியம் தலா ஒருவர். பின்னர் மகாசபை கூடிப் போட்டியிடுதற்கான வயது வரம்பை 35-70 என மாற்றியது.

**உத்திரமேரூர் கல்வெட்டு**

இவ்வுத்திர மேரூர்க் கல்வெட்டின் மூலம், முதற்பராந்தகன் காலத்திற்கு முன்பே ஊர்ச்சபை நன்கு வளர்ந்திருந்தமையை அறியலாம். கிராமப்பணிகள் செய்வதற்குத் தற்காலிகமாகத் தொடங்கிய வாரியங்கள் பின்னடைவில் நிலைபேறு கொண்டன என்பர். காலந்தோறும் இடந்தோறும் வாரியங்களின் அமைப்புகள் மாறிவந்துள்ளன.

முதற் பராந்தகன் காலத்தின் உத்திரமேரூர் சதுர்வேதி மங்கலத்தில் இருந்த சபை, அவ்வூருக்குரிய சபை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்குக் கையாண்டமுறைகளைப் பட்டியலிட்டுள்ளது. உறுப்பினர்க்கான தகுதிகள், உறுப்பினர் ஆகத் தகுதியற்றவர்கள், தேர்தல் நடத்தும்முறை ஆகியன இங்குள்ள இரண்டு கல்வெட்டுகளால் அறியப்படுகின்றன. அரசனின் ஆணைபெற்ற அதிகாரி தத்தனூர் மூவேந்தர் வேளாண் வந்திருந்தான். அவன் முன்னிலையில் முடிவுகள் எடுக்கப்பட்டன" என்பது கல்வெட்டுச் செய்தி.

**பண்டைத் தமிழரின் வாழ்வியல் விழுமியங்கள் (அ) (Higher values of Early Tamils) உயர்தகவுகள்**

பழந்தமிழ் மக்கள் தங்கள் அகவாழ்விலும் புறவாழ்விலும் கடைபிடித்த உயர் சிந்தனைகள் உலகத் தரம் மிக்கன.

1. நாடாளும் அரசன் தன் குடிகளிடம் இருந்து முறையாக வரி வசூல் செய்தல் வேண்டும். இன்றேல் "யானை புக்கபுலம் போலத் தாமும் உண்ணான் உலகமும் கெடுமே" என்றாகி விடும் என்கிறார் பிசிராந்தையார்.

2. ”யாதும் ஊரே; யாவரும் கேளிர்” என்ற “உலகக் குடும்பம்“ பேசப்பட்டது. Fraternity என்ற சகோதரத்துவம் 2000 ஆண்டுகட்கு முன்பே வலியுறுத்தப்பட்டது.
3. எவ்வழி நல்லவர் ஆடவர்; அவ்வழி நல்லை வாழிய நிலனே“ என்ற கொள்கை மக்களே நாட்டின் அடிப்படை என்பது வலியுறுத்தப்பட்டது.
4. உலகம் இன்பமும் துன்பமும் நிறைந்தது என்பது பக்குடுக்கை நன்கணியார் கூற்று.
5. எவ்வகைச் செல்வம் இருப்பினும் குழந்தைச் செல்வமே உயர்ந்தது என்கிறான் பாண்டியன் அறிவுடை நம்பி.
6. புகழெனின் உயிரையும் தருதல்; பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளாமை“ தமிழரின் கொள்கை.
7. பிறர்நலம் பேணுவோர் உலகை இயக்குகின்றனர்.
8. அவ்வை – அதியன், பாரி – கபிலர், கோப்பெருஞ்சோழன் – பிசிராந்தையார் நட்பு, உணர்ச்சிதாம் நட்பாம் கிழமை தரும் என்ற வள்ளுவத்தை நினைவு படுத்தியமை.
9. ”நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும் அல்லது செய்தல் ஓம்பமின்” என்ற புறப்பாட்டு, பிறர்க்குத் தீங்கு செய்யாமையை வலியுறுத்துகிறது.
10. ”பிறப்பொக்கும் எவ்வுயிர்க்கும்” என்ற குறள் சமத்துவம் பேசும்
11. ”உண்பது நாழி; உடுப்பவை இரண்டே”
12. செல்வத்துப் பயனே ஈதல்

இவை போன்ற உயர் சிந்தனைகளைத் தமிழர்கள் தம் வாழ்வில் பேணிக்காத்தமையால் தமிழினம் பண்பாட்டின் கொடு முடியில் நின்றது.

பழந்தமிழ்ப் புலவர்கள் மக்கள் தங்கள் வாழ்வியலில் கடைப்பிடிக்க வேண்டிய அறங்களைத் தொகுத்துரைத்தனர். அரசர்களும், புலவர்களின் செவிச்செல்வத்துக்கு ஈடுகொடுத்தனர். ”மக்கள் ஆக்காத மனுவேந்தர்களாகிய கவிஞர்கள்” அரசர்கள் தவறிழைக்கும் போது இடிந்துரைத்தனர். உண்பதும் உடுப்பதும் எல்லோர்க்கும் சமம், அரசன் – ஆண்டியாயினும் செல்வத்தின் பயன் ஈதலே என்றனர். ஈந்து உவப்பதே இன்பம் என்றனர். ஓரிடத்தில் சேரும் செல்வம் பூட்டிக்கிடப்பது, வன்முறை என்றனர்.

ஒட்டிய வயிறுகளை நிறைய வைப்பவன் “பசிப்பிணி மருத்துவர்” எனப்பட்டான். மணிமேகலை சிறைக்கோட்டத்தில் இருந்த கைதிகளுக்கெல்லாம் அறத்தைப் போதித்தாள், அகிலத்திற்கே அன்னமிட்டாள்.

பண்டைத் தமிழர்கள் தாம் செய்த அறச் செயல்களுக்காகப் பிரதிபலன் எதிர்பாராது செயலாற்றினர். “இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும் அறவிலை வணிகர்”, அல்லர் அவர்கள்.

குறியெதிர்ப்பை நாடாது அறம் செய்வதில் கைதேர்ந்தவர்கள் அவர்கள்.

ஆற்றுப்படை நூல்கள் அனைத்துமே பழந்தமிழரின் கொடைப் பதிவுகளாக உள்ளன. தாம் பெற்ற பெருவளத்தைப் பெறாதோர்க்கும் ஆற்றுப்படுத்திய செம்மல்களாகத் திகழ்ந்தனர், தமிழர்.

இந்திரர் அமிழ்தம் :- அமிழ்தமே கிடைத்தாலும் தனித்து உண்ணாது, பொதுவில் பகிர்ந்த புண்ணியவான்கள் அவர்கள்.

“வசுதைவ குடும்பகம்” என்று வடமொழி காட்டிய “உலகம் ஒரு குடும்பம்” என்ற நெறியில் வழுவாது “யாதும் ஊர், யாவரும் உறவு” என்ற பரந்த சகோதரத்துவம் படைத்தனர்.

ஔவையின் ஆத்திசூடியும் கொன்றை வேந்தனும், மூதுரையும் எளிய சொற்களால், அடிகாளல் மிகப்பெரும் அறம் உரைத்தன.

“ஓதுவது ஒழியேல், ஏற்பது இகழ்ச்சி, எண் எழுத்து இகழேல், ஙப்போல் வளை, ஆறுவது சினம்” என்பன மனித குலத்திற்கே வழங்கப்பட்ட அறக்கொடைகள்.

**”இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண**

**நன்னயம் செய்து விடல்”.**

- என்ற உயரிய கொள்கைக்கு உரிமையாளர்கள் தமிழர்கள்.

ஒல்லும் வகையால் அறங்களைச் செய்ய வேண்டுவதன் அவசியத்தை வலியுறுத்தியது வள்ளுவம். இயல்வது கரவேல் என்பது ஔவையின் வாக்கு.

**"எவ்வழி ஆடவர் நல்வழி**
**அவ்வழி நல்லை வாழிய நிலனே".**

என்பது ஔவையின் கோட்பாடு.

"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்" என்பது தொன்மைத்தமிழ் உலகியல்.

**"யாவருக்குமாம் ஒரு கைப்பிடி" என்பது திருமூலர் உரை.**

**தமிழர் தம் நல்லறக்கருத்துகள் உலகளாவியவை!**

**தமிழர் தம் பண்பாட்டில் காதல், உடன்போக்கு, குறிபெயர்த்தீடு, மடலேறுதல் பற்றிய கருத்துகளின் தொகுப்பு**

1. **அகம் – காதல்:** "ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப" (தொல்காப்பியம்) "பயிலியது கெழீஇய நட்பு" (குறுந்தொகை) கண்டதும் காதல் (Love at First Sight).

   பகற்குறி : தலைவியின் இல்லத்திற்கப்பால் இருவரின் சந்திப்பு நிகழும் இடம்

   இரவுக்குறி : தலைவியின் இல்ல எல்லைக்குள்ளேயே நடக்கும் சந்திப்பு

   அம்பல் : தலைவியின் காதல் உறவினர்க்குத் தெரிதல்

   அலர் : தலைவியின் காதலை ஊரார் அறிதல்

2. **குறி பெயர்த்தீடு:** தலைவன்-தலைவியின் கூட்டத்திற்கு இடையீடு ஏற்படுகையில், தலைவி வேறு நிகழ்விடம் காணுமாறு தலைவனைத் தூண்டுதல்.

3. **மடலேறுதல்:** இருவர்க்கும் மணம் செய்விக்க இரு தரப்புப் பெற்றோர் உடன்படாத வேளையில், தலைவன் பனையோலையால் குதிரை செய்து, தலைவியின் படம் வரைந்து ஊர் மன்றத்தில் முறையிடுதல்.

4. **அறத்தொடு நிற்றல்:** திருமணம் தாமதிக்கும் போது, தோழி தலைவனிடம் தலைவியை மணம் செய்ய வற்புறுத்தல்; இருதரப்புப் பெற்றோரிடம் சமாதானம் பேசித் திருமணம் ஏற்பாடு செய்தல்.

5. மடலேறுதல், அறத்தொடு நிற்றல் இரண்டும் பலனளிக்காத போது, தலைவன் கட்டளைப்படி, தலைவி தலைவனுடன் வேற்றூர் சென்று வாழத் தலைப்படுதல்.

**பழந்தமிழர் பண்பாட்டில்**

சங்கத் தமிழரின் அகவாழ்வு பற்றிய ஒழுக்கங்களைக் கூறும் பதிவுகளின் தொகுப்பே அகத்திணை. களவியல் – கற்பியல் என இரண்டு இயல்களால் இயங்கிப் பழந்தமிழரின் காதல்வாழ்வினைக் கற்புநெறிப்படுத்திக் காத்த, அகத்திணை.

"ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம், அக்கூட்டத்தின் பின்னர் இவ்வாறு இருந்தது என யாண்டும் கூறப்படாததாய், உள்ளத்துள்ளேயே வைத்து உணரப்படுவதோர் உறுபொருள் அகம்" என்பது நச்சினார்க்கினியரின் நல்லுரை விளக்கமாகும்.

நனிநாகரிகச் சார்புடைய தமிழ்க்காதலில் "ஊடல்" இடம்பிடித்தது. தலைவன் – தலைவி இடையில் ஏற்படும் சிறுசண்டையின் கால அளவு ஒருசில வினாடிகளே நீளும் என்பது சிறப்பு.

**"உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது**

**மிக்கற்றால் நீள விடல்"**

வள்ளுவம் வகுத்த நெறியிது. உணவுக்கு உப்புத் தேவையேற்படுமாப் போல காதல் வாழ்க்கைக்கு ஊடல் தேவை என்கிறது வள்ளுவம்.

மடலின் மகிமை – பெண்கள் மடலேறி மணம் வற்புறுத்தும் வழக்கம் சங்கத்தில் இல்லை. ஆடவரே பனைமடல் ஊர்ந்து, பொதுமன்றில் தனது காதலைக் கற்புநெறிக்கு வலியச் செலுத்த முனையும் போக்கு அகம் காட்டும் அறமாகும்.

உடன் போக்கில் ஈடுபடும், ஆண்-பெண் இருவரும், இல்லற வாழ்வின் செவ்வியை வலியுறுத்தும் நோக்கத்தில் தான் செல்கின்றவரேயன்றிச்

சிற்றின்ப வேட்கை மீதூறியன்று. அவ்வாறு உடன் போக்கில் ஈடுபட்ட தலைவனும் தலைவியும் மீண்டுவரின் அவர்களுக்குத் திருமணம் செய்விப்பேன் எனக்கூறும் தாய் பற்றியும் நற்றிணை என்ற இலக்கியம் பேசுகிறது.

**பழந்தமிழர் அகவாழ்வில் விரிச்சி கேட்டல், ஊடல், கரணம், பரிசம்**

1. **விரிச்சி கேட்டல் :** இல்லத்து நிகழ்வுகள் மங்களகர முடிவினை அடைய, முதுபெண்டிர் அண்டை அயலார், வழிப்போக்கர் கூறும் கூற்றுகளில் நன்மையைத் தெரிதல்.
2. தலைவன்-தலைவி இருவரிடையே ஏற்படும் சிறு சண்டை. தித்திக்கும் இனிப்புடன் சற்றே காரம் போல, உணவில் உப்பைப் போல இல்லறத்தார் இடையே நிகழும் இச்சிறு பிணக்கு, தோன்றிய அளவில் மறையவும் வேண்டும் என்பது உளவியல் விதி.
   "உப்பமைந் தற்றால் புலவி" என்பது வள்ளுவம். புலவி – ஊடல்.
3. **பரிசம் :** பழந்தமிழர் மணநிகழ்வின் போது, மணமகன் மணமகளுக்கு அளிக்கும் அன்பளிப்பு இது. சிறுவளை விலை, பரியம், பாசிலை விலை என்ற பெயர்களும் உண்டு.
4. **கரணம்:** "பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணம் என்ப" என்ற தொல்காப்பிய நூற்பா, சமூகத்தில் அகக்கேடுகள் மலிந்தமையால், திருமணம் என்ற சடங்கு தோன்றியது என்கிறது. மனம் போன போக்கில் செல்லும் மனித ஆற்றலை மடைப்படுத்துவதே திருமணம். இம்மணவாழ்வே சமுதாய இணக்கத்தை உருவாக்குகிறது. கரணம் – சடங்கு, திருமணம்.

**பழந்தமிழர் அகவாழ்வில்**

பண்டைத் தமிழரின் அகவாழ்வியற் பண்புகளில் நம்பிக்கைகளும் சகுணங்களும், சடங்குகளும் இருந்துள்ளன என்பது அகப்பாடல்கள் வழித் தெரிய வரும் கூறுகள் ஆகும்.

ஆடவர்க்கு வலது கண்ணும், இமையும் தோளும், பெண்களுக்கு இடது கண்ணும் இமையும், தோளும் துடிப்பது நற்சகுணமாக உணரப்பட்டுள்ளது.

ஊரார் கூறும் நல்ல சொற்கள், மங்கல விழாவுக்கான சகுணமாகக் கொள்ளப்பட்டன. வெளியில் புறப்படுகையில் பூனை குறுக்கே வருவது தீநிகழ்வாக இன்று கருதப்படுவது போல அன்றும் தமிழரிடையே சில நம்பிக்கைகள் இருந்துள்ளன.

திருமணம் நிச்சயிக்கப்பட்ட பெண்ணிற்கு மணமகன் அளிக்கும் பரிசுப் பொருள்களால் இரு குடும்ப உறவுகள் செழுமையடையும் என்பது எதிர்பார்க்கப்பட்ட பண்பு நெறி. எனவே பரியம், பரிசம், மணவிலை என்ற நிகழ்வு பண்பியல் ரீதியாகப் பார்க்கப்பட்டது. சமூகத்தில் நிலவும் அறக்கேடுகளில் இருந்து "குலமகளைக் காக்க வேண்டிய பொறுப்பின் ஓர் அங்கமாகக் "கரணம்" என்ற திருமணச் சடங்கு தோன்றியிருக்க வேண்டும்.

சிற்சில கட்டுப்பாடுகளுடன் கூடிய நெறிமுறைகள், விதிகள் வகுத்துத் திருமணம் எளிதாக நிறைவேற்றப்பட்டது. ஊராரின் அமங்கலச் சொற்கள் மணமக்களின் செவிகளில் விழாமல் காக்கவே, "மணமுழா" முழங்கிது.

ஆகப் பழந்தமிழர் அகவாழ்வில் கொண்டாடப்பட்ட எல்லாமே, அர்த்தம் உள்ளதாகி வாழ்க்கையை வளம் செய்தன.

## மூதின் முல்லை, பாதீடு, உண்டாட்டு, பகழி மாய்த்தல் ஆகிய போர்த்துறைகள் காட்டும் செயற்பாடுகள்

1. **மூதின் முல்லை/குடிநிலை :** மறவர், எயினர், மழவர், மள்ளர் ஆகிய மறக்குடி மகளிர் இயல்பிலேயே வீரம் மிக்கவர்களாகத் திகழ்ந்தனர். போர்க்களத்தில் போரிடத் தன் ஒரே மகனைப் போருக்கு அனுப்பிய வீரத்தாய் பற்றிப் பேசுவது "மூதின்முல்லை, குடிநிலை" எனப்படுகிறது.
2. **பாதீடு:** பகை நாட்டை வெற்றி கண்ட அரசன் தன் வீரர்களுக்குப் பகைவரிடம் கைப்பற்றிய பொருள்களைப் பங்கீட்டுத் தருதல் "பாதீடு" எனப்பட்டது.
3. **உண்டாட்டு:** வெற்றி பெற்ற அரசன் தன் மகிழ்வை வெளிப்படுத்தும் வண்ணம், சக வீரர்களுடன் இணைந்து புலாலுணவும் கள்ளும் உண்டு களிப்பதே "உண்டாட்டு" என்ற நிலையாகும்.
4. **பகழி மாய்த்தல்:** பகழி – அம்பு கணை, கோல், பகழி எனப்படும் அம்புகளைப் போர் வீரர்கள், போருக்கு ஆயத்தமாகும் முன்னர்

தூய்மைப்படுத்தல் மற்றும் தங்களுக்குத் தேவையான அம்புகளைத் தாங்களே தயார் செய்தலும் ஆகும்.

5. **வல்லாண் முல்லை:** இல்லத்திற்கு வரும் விருந்தினரைப் பேணிக்காக்க இயலாத வறுமையிலும் தலைவன், விலை மதிப்பற்ற போர்வாளை விற்று உபசரித்தல். அடுத்த நாள் விருந்து வரும் போது, தன் மதிப்பு மிக்க யாழினை விற்று விருந்து போற்றுதல், வல்லமை மிக்க ஆண்மையின் ஆளுமையே வல்லாண் முல்லை.
6. தொல்காப்பியம் வகுத்த புறத்திணைகள் ஏழிற்குப்பதில் புறப்பொருள் வெண்பாமாலை, புறத்திணைகளைப் பன்னிரண்டு ஆக்கியது. வெட்சி முதல் வாகை ஈறாக உள்ள ஒன்பது திணைகளும் படிப்படியான போர் அறங்களை வீரர்களுக்கு வகுத்துத் தந்து அவை மாறாமல் கடைபிடிக்கப்படுவதை உறுதி செய்தன. கால்நடைகளைப் போர் விளைவினின்று காக்க வேண்டியே, வெட்சிப் போர் மூண்டது. ஆநிரைகளைக் கைப்பற்றிய வீரர்கள் தமக்குள் அதனைப் பங்கீடு செய்து கொண்டமையே "பாதீடு" ஆக மாறியது.
7. அரசரும், வீரர்களும் அருகருகே கூடி நின்று போர் வெற்றியை மது-மாமிச விருந்துடன் ஆடிய நிகழ்வின் வெளிப்பாடே "உண்டாட்டு" ஆகியது.
8. பழந்தமிழ் முதுமைப் பெண்களும் வீரம்மிக்கவராக விளங்கினர். அவர்கள் புலியை முறத்தால் விரட்டியதாகப் புறம் பேசுகிறது.
9. ஒரு மகனைப் பெற்ற பெண் ஒருத்தி தன் மகனுக்குப் பூச்சூட்டித் தலைவாரி வெற்றித் திலகமிட்டுப் போர்க்களம் அனுப்பிய நிகழ்வையும் புறம் பதிவு செய்கிறது. மூதின் முல்லையான இப்போர் வீரம் பழந்தமிழரின் வீரயுகத்தின் வெளிப்பாடாகும்.
10. "தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே" என்ற காவற்பெண்டுவின் கூற்று, கற்பனையன்று.
11. போரில் தன்மகன் புறமிட்டான் என்ற பொய்யுரையை நம்பிய பெண்ணொருத்தி போர்க்களம் சென்று தன்மகன் அம்பினை மார்பினில் ஏற்றதை எண்ணிப் பெற்ற காலத்திலும் பெரிது மகிழ்ந்தமையையும் புறம் பதிவு செய்துள்ளது.

**உமணர், வம்பலர், வாள் போழ்ந்து அடக்கல், கையறுநிலை**

1. **உமணர்:** நெய்தல் நில உப்பு வணிகரே உமணர். தாம் ஆக்கிய உப்பினை மாட்டு வண்டிகளில் ஏற்றிக் குடும்பத்துடன் ஊர்தோறும் சென்று, பல நாள் தங்கி வணிகம் செய்வர். பெண்கள் நெல்லுக்கு நேராக உப்பை விற்ற நிகழ்வு இலக்கியங்களில் கூறப்படுகின்றது.
2. **வம்பலர் :** தமிழகம் வந்து பொருட்களைக் கொள் முதல் செய்து விற்பனை செய்வோர் "வம்பலர்" ஆவர். கடுமையான காலணிகள், உடலை மறைக்கும் கவசம், கையில் உடைவாள் கொண்டவர்கள் வம்பலர். குழுக்களாகச் சென்று வணிகம் செய்யும் இவர்கள் "சாத்து"கள் எனப் பழந்தமிழகத்தில் அழைக்கப்பட்டனர்.
3. **வாள் போழ்ந்து அடக்கல்:** "குழவி யிறப்பினும் ஊன்தடி பிறப்பினும் ஆளென்று எண்ணி வாளில் தப்பார்" என்ற புறப்பாடல், வீரமரணம் அடையாதவரை வாளால் பிளந்து போர்க்குறி செய்து அடக்கம் செய்தல். தமிழர்களின் வீரயுக வெளிப்பாடு இது.
4. **கையறுநிலை (ELIGY):** உற்றார், உறவினர், நண்பர்களை இழந்தோர் அடையும் துன்ப நிலையின் வெளிப்பாடு இது. வள்ளல் பாரி மறைந்தபின் அவன் மகள்கள் ஆன அங்கவை, சங்கவை பாடிய "அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்" பாடல் படிப்போரைக் கலங்கச் செய்யும்.

பண்டித நேரு அவர்கள் மறைந்த போது கண்ணதாசன் பாடிய இரங்கற்பா இவ்வகையே. மூன்றாம் நந்தி வர்மனின் மறைவுக்காகப் புலவர் வருந்தியமை இலக்கிய உலகறியும். தமிழ்நாட்டுச் சிற்றூர், பேரூர்களில் மரண நிகழ்வில் பெண்கள் பாடும் ஒப்பாரியும் கையறுநிலையும் ஒன்றன்று.

பழந்தமிழகத்தில் உள்ளூர் வணிகத்தில் உமணர், வம்பலர் எனப்படுவோரின் பங்கு சிறப்பாக இருந்திருந்தது. பண்டமாற்று வணிகமுறையில் (Barter System) நெல்லும் உப்பும் சமநிலை பெற்றன. பொதியாகக் கட்டி வண்டியில் ஏற்றிக் குடும்பத்தோடு ஊர்விட்டு ஊர்சென்று

உப்புவணிகம் செய்த உமணர்கள் தமிழக வணிகப் பண்பாட்டில் சிறந்த இடம் பிடித்தனர்.

அயல்நாடுகளில் இருந்து வந்து தமிழ்நாட்டில் தங்கி வாழ்ந்தோர், வணிகம் புரிந்தோரே வம்பலர் எனப்பட்டனர்.

தமிழின் புறந்திணைகளுள் ஒரு உட்பிரிவாக "வாள் போழ்ந்தடக்கல்" விளங்கியது.

**"குழவி இறப்பிலும் ஊன்தடி பிறப்பிலும்**

**ஆளென்று எண்ணி வாளில் தப்பார்" என்ற பாடல்.**

போரில் விழுப்புண் படாது இறந்தவரை வாளால் பிளந்து அடக்கம் செய்த வீரயுகத்தை நமக்கு அடையாளப்படுத்துகிறது.

தந்தை பாரி இறந்தவுடன் பாரியின் மகள்கள் பட்ட வேதனையை அவர்களின்,

"அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்" என்ற பாடல் கையறு நிலையாகப் பதிவு செய்கிறது.

**பழந்தமிழர் வாழ்வியலில் ஊர் விழாக்கள் தொடர்பான கருத்துகள்**

**இந்திர விழா**

தமிழர்களின் வாழ்வில் இந்திரனுக்குச் சித்திரை மாத முழுநிலா நாளில் எடுக்கப்படும் விழா இது. சிலம்பும் மேகலையும் இவ்விழா பற்றிப் பேசுகின்றன. காவிரி கடலோடு கலக்கும் பூம்புகார் நகரில் இருபத்தெட்டு நாட்கள் நடைபெறும் இவ்விழா, எழுச்சியும் மகிழ்ச்சியும் ஊட்டும் பெருவிழாவாகும். வீடுகள், தெருக்கள் அலங்கரிக்கப்பட்டு நகரமே அழகு பெறும் இவ்விழாவில் மக்கள் பகை மறந்து ஒருவரை ஒருவர் வாழ்த்தி மகிழ்வர். தனக்குச் செய்யப்படும் சிறப்புகளால் மகிழ்ந்து இந்திரன் நாட்டை வளம் பெறச் செய்வான் என்பது மக்களின் நம்பிக்கை.

## வெறியாட்டு

தற்காலத்தில் பெண்கள் மேல் வரும் சாமியாடலே இது. ஆவேசக் கூச்சலுடன் கூடிய உள்ள எழுச்சியே இவ்வாட்டம். முருக வழிபாட்டோடு தொடர்புடைய இந்நிகழ்வு வேலன் வெறியாடல் எனப்படும். வெறியாடும் மகளிர், ஆடவர் மீது நெல்லும் மலரும், நீரும் தூவிப் பரவுவர். தொல்காப்பியம் இதனை "வெறியாட்டு அயர்ந்த காந்தள்" என்கிறது.

## நடுகல் வழிபாடு

வீரமரணமடைந்த போர் வீரன் நினைவாக எடுக்கப்படும் கல்லெடுப்பு இது. மனைவி, மக்கள், உறவினர், வழியிடைச் செல்வோர் என அனைவரும் மயிற்பீலியும், மலரும் அணிவித்து வழிபாடு செய்வர். நடுகல்லில் மஞ்சள் பூசுவர். காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல், பெரும்படை, வாழ்த்து என ஆறு உட்பிரிவுகளாக இவ்வணக்கத்தைக் கூறும் தொல்காப்பியம், வீரயுக வழிபாட்டைப் படையல் செய்கிறது.

## குன்று தோறாடல்

தங்கள் குலக்கடவுளாம் முருகனை வழிபடும் மலைநில மாந்தரின் நிலையே இது. குறத்தி குறிப்பிட்ட இடத்தைத் தேர்வு செய்து, தூய்மைப்படுத்தி மலர்களால் அணி செய்வாள். கொடியேற்றம், சடங்குகள், ஆட்டுக் கிடாய்ப்பலிக் குருதி தெளித்தல், அரிசி தூவுதல், மஞ்சள், சந்தனம் அணிவித்தல், முதிய வேதியர் தலைமேல் கரம் உயர்த்திப் பக்தர்களை வாழ்த்தல் என அடுத்தடுத்து நிகழ்வுகள் அரங்கேறும். சிலம்பில் இவ்வழிபாடு "குன்றக்குரவை" எனக் காட்டப்படுகிறது. ஆடல், பாடல் என ஊரே அமர்க்களப்படும் இந்நிகழ்வு "குன்று தோறாடல்" என்று நக்கீரரால் திருமுருகாற்றுப் படையில், திருத்தணி நிகழ்வாகக் காட்டப்படுகிறது.

திருக்கார்த்திகைத் திருவிழா :- கார்த்திகை விண்மீனை "அறுமீன்" என நற்றிணை குறிப்பிடுகின்றது. பொருள் தேடச் சென்ற தலைவன் கார்த்திகை விழாவைத் தன்னுடன் கொண்டாட வருதலைத் தலைவி விரும்புகிறாள். "கார் நாற்பது" என்ற பதினெண் கீழ்க்கணக்கு நூல், இவ்விழா "மூன்றுநாள்"

கொண்டாடப்படும் என்கிறது. திருமயிலைப் பதிகத்தில் ஞானசம்பந்தர் இவ்விழாவை "விளக்கீடு" என்கிறார். வீடுகளும், தெருக்களும் ஒளிவிளக்குகளால் அழகுபடுத்தப்பட்டமையை அகநானூறு (141) கூறுகிறது.

திருவோணம் – "மாயோன் மேய ஓண நன்னாள்" என்கிறது மதுரைக் காஞ்சி திருமாலோடு தொடர்புடைய விண்மீன் திருவோணம். இது ஆவணித் திங்களில் கொண்டாடப்பட்டது. கி.பி. 7ம் நூற்றாண்டில் வாழந்த ஆழ்வார்கள் இதுபற்றிக் குறிப்பிடுகின்றனர். கேரளத்தில் இந்நாள் இன்றும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

பொங்கல் – தைத்திங்களில் கொண்டாடப்படும் இவ்விழா அறுவடை விழாவாகத் தொடங்கிப் பின் வளம் குறிக்கும் விழாவாக மாறியது. தைமாதத்தில் நோன்பு நோற்பது பற்றிய விவரமும் கிடைக்கிறது.

இளவேனில் விழா – காமனுக்குரியதாகக் கருதப்படும் இளவேனிற் காலத்தில் இவ்விழா கொண்டாடப்படுகிறது. காமன் காதற் கடவுளாகக் கருதப்படுகிறான். இதனைப் பரிபாடல் காட்டுகிறது.

மேலும். தை நீராட்டு, வைகை வெள்ளத்தில் நீராடு விழா, பரங்குன்ற விழா, திருமலைவிழா, கொங்கர்களின் உள்ளி விழா, வீரர்கள் கலைப்பயிற்சித் தொடங்கும் உள்ளிவிழா, விறலியர் ஆடும் கோடியர் விழா, மன்னரின் பிறந்த நாள் விழா ஆகியன ஊர் விழாக்களாகக் கொண்டாடப்பட்டன.

**பல்வேறு காலகட்டங்களில் தமிழர்களின் பொருளியல் நிலைகள்**
**பழந்தமிழகம்**

தமிழர்கள் எளிமையும் தன்னிறைவும் உடையவர்கள். கடின உழைப்பாளிகள், ஏழை, செல்வந்தர், இடைப்பட்டோர் எனப் பலநிலையினர் இருந்தனர். எத்தொழில் செய்தாலும் அறம் காப்பர். உழவும், வணிகமும் அவர்தம் பொருளாதார அடிப்படைத் தொழில்கள், வேட்டையாடல், கால்நடை மேய்ப்பு, கட்டுமானம், கப்பல் கட்டுதல், அங்காடிகள், அயலக வணிகம், நெசவு, தச்சு, கொல்லுத்தொழில், நகைத் தொழில் என அனைத்திலும் கை தேர்ந்த தொழில் வழியினர் தமிழர்கள்.

கைவினைத் தொழில்களான பானை வனைதல், நூற்பு, நெசவு, கயிறு திரித்தல், கூடை முடைதல் எனப்பல்வேறு சிறு தொழில்களையும் பழந்தமிழர் மேற்கொண்டனர்.

**உள்நாட்டு வணிகம்**

தமிழரின் உள்நாட்டு வணிகம் பண்டமாற்று முறையிலானது. நெல்லே வணிக அலகாக (UNIT)க் கணக்கிடப்பட்டது. குடியிருப்போர் வாசல்வரை வணிகர்கள் சென்றனர். பகல்-இரவு நேரச் சந்தைகளாக முறையே நாளங்காடியும் அல்லங்காடியும் விளங்கின.

**இடைக்காலத்தில்**

பல்லவ அரசர்கள் உழவுத் தொழிலை வளர்க்க ஆற்றிய அரும்பணி நீரியல் மேலாண்மை. ஏரிகள், குளங்கள், வெட்டி அவற்றை நிர்வாகம் செய்யப் பணியாளர்களை அமர்த்தினர். நிலநிர்வாகம் தேவதானம், பிரம்மதேயம், பொது நிலங்கள் என வகைப் படுத்தப்பட்டன. இக்காலத்தில் உழவியற் பொருளாதாரம் தலை சிறந்து நின்றது.

சோழர் காலத்திலும் நீர்ப்பாசன வசதிகள் விரிவான முறையில் விளங்கின. ஆறில் ஒரு பங்கு விளைச்சல் வரியாக வசூலிக்கப்பட்டது. பண்டமாற்றே நாணய மாற்றாகக் கொள்ளப்பட்டது. இக்காலத்தில் மக்கள் கடல்கடந்த வணிகத்தில் ஈடுபட்டனர் என்பதை சுமத்ரா, சீனா, ஜாவா போன்ற நாடுகளில் கிடைத்த தமிழ்க் கல்வெட்டுகள் மூலம் அறியலாம்.

துணிமணிகள், நறுமணப்பொருட்கள், மருந்துகள், அணிகலன்கள், தந்தம், பவளம், முத்து ஆகியன ஏற்றுமதி செய்யப்பட்டன. அரபுக் குதிரைகள், சாம்பிராணி, காகிதம், நறுமணப் பொருட்கள் இறக்குமதியாயின.

நாயக்கர் காலப் பொருளியல் நிலை மக்களைச் செழிப்புடன் வைத்திருந்தது. பிராமணர்கள் சமூக உயர் தகுதியில் வசதிகளை அனுபவித்தனர். பிற கால கட்டங்களைப் போலவே பல்வேறு தொழில்களும் நிலவின.

18-20ஆம் நூற்றாண்டுகளில், உழவு, வணிகம், சமூகம் சார்ந்த தொழில்கள் என மக்கள் வாழ்ந்தாலும் பிரிட்டிஷாரின் கெடுபிடிகள் மலிந்தன. நம் மூலப் பொருட்கள் இங்கிலாந்து கொண்டு செல்லப்பட்டு மதிப்புறு பொருட்களாகத் தயார் செய்யப்பட்டு இலாப நோக்கோடு நமக்கே வணிகப் பொருள்களாயின. அதனால் தமிழகப் பொருளியல், வேலைவாய்ப்பு இரண்டாம் நிலையானது.

ஜமீன்கள், மிட்டா மிராசுகள், பெரு நிலக்கிழார்கள் வசதிகளுடன் வாழ, சாமானியர்கள் தத்தம் கைத்தொழில்களையே நம்பியிருந்தனர்.

செட்டி நாட்டு மக்கள் பர்மா, மலேசியா போன்ற நாடுகளில் வணிகம் செய்து பொருளீட்டிச் செல்வச் செழிப்புடனும் அறக்கட்டளைகள், பெருந்தொழில்களைத் தமிழகத்தில் நிறுவிப் பொருளியல் தூண்களாக விளங்கினர்.

காவிரி பாயும் பத்துக்கும் மேற்பட்ட மாவட்டங்கள் விவசாயத்தையே நம்பிப் பிழைக்க, ஈரோடு, கரூர், சேலம், கோவை, சென்னை, செங்கை மாவட்ட மக்கள் கனரகத் தொழில்கள், தொழிற்சாலைகள் எனப் பணிபுரிந்தனர்.

திண்டுக்கல் மலர், பூட்டு வணிகத்திலும், நாமக்கல் பேருந்து கட்டுமானம், முட்டை உற்பத்தி, கடலூர், நாகை கருவாட்டுச் சந்தை, தோவாளை மலர்ச்சந்தை, கோவை வீட்டுச் சாமான்கள் உற்பத்தி, பஞ்சாலைகள் எனப் பரபரப்புடன் இயங்கின.

காலம் தோறும் ஏற்பட்ட மாற்றங்களுக்கு ஈடுகொடுத்து இன்று வரை தமிழ்ச் சமூகம் தனது பொருளியல் உறுதித் தன்மையைப் பேணி வருகின்றது.

**பல்வேறு காலகட்டங்களில்**

மக்களின் பொருளதார நிலையைப் பொறுத்தவரையில் தமிழரின் உழவும் வணிகமும் இரு கண்களாக இருந்துள்ளன.

> "**உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், மற்றெல்லாம்**
>
> **தொழுதுண்டு பின்செல் பவர்**"

என்ற குறள் வழி, வேளாண் பெருமக்கள் பொருளாதாரத்தின் அடிப்படை வாதிகள் ஆக விளங்கியிருக்கின்றனர். தவிர உள்ளூர் வணிகமும் உச்சத்தில் இருந்துள்ளது. சமுதாய நல்வாழ்வுக்கு வணிகமும் உச்சத்தில் இருந்துள்ளது.

சமுதாய நல்வாழ்வுக்கு உதவும் தொழில்களைச் செய்த பல்வேறு தொழிற் பிரிவினர் இருந்தனர்.

தொழில் முறைக் குழுக்களாகப் பிரிந்திருந்த (Clan based community) தச்சர், கொல்லர், குயவர், வண்ணார், நெசவாளர், உமணர், பாணர், துடியர், கடம்பர், வேட்டுவர் கணியர், பரத்தையர் என்ற பிரிவினர் வாழ்ந்து தத்தம் வாழ்வாதாரங்களுக்கான பொருள் ஈட்டினர். செல்வர் மனைகளில் குற்றேவல் செய்யும் மகளிரும் இருந்துள்ளனர்.

"கருமமே கட்டளைக்கல்" என வள்ளுவம் உரைக்கும் பொன்னைத் தரம் பார்க்கும் உரைகல் கூறப்படுவதால், தங்க நகைகள் செய்யும் தொழில் பழந்தமிழகத்தின் பொருளியல் நிலைக்குச் சான்றாகும்.

நெய்தல் தொழில் தமிழகத்தில் தலை சிறந்து விளங்கியது. பருத்தி, பட்டு, உரோமம் முதலியவற்றால் ஆடைகள் நெய்யப்பட்டன.

முல்லை நில ஆயர்கள், தமிழகப் பொருளியல் நிலைகளில் குறிப்பிட்ட பங்கு வகித்திருந்தமையைச் சங்கப்பாடல்கள் வழி அறியலாம்.

மீன்பிடி, உப்புவிளைவிப்பு எனப் பரதவர்களின் தொழில்களும் பொருளாதாரத்துக்கு உரமூட்டின.

எனவே பல்வேறு தொழில்முறைக் குழுக்களின் தொழில்கள், உள்ளூர் வணிகம், கடல் வாணிகம் எனத் தமிழகம் தலைநிமிர்ந்து நின்றமையை அறியலாம்!

**செப்பேடுகள் /பட்டயங்கள் (Copper Plates)**

தமிழக வரலாறு, பண்பாட்டினை வரையறுக்கத் துணை செய்யும் செப்பேடுகள் பற்றிய விவரங்கள் சில.

1. சங்ககாலப் பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதியினைப் பற்றிய செய்திகளை வேள்விக்குடிச் செப்பேடுகள் தருகின்றன.
2. பாண்டியனின் தலையாலங்கானத்து வெற்றியினைச் சின்ன மனூர்ச் செப்பேடுகள் தருகின்றன.
3. பல்லவ மன்னன் சிம்மவிஷ்ணுவின் சேர, சோழ, பாண்டியர், களப்பிரர் மீதான வெற்றியினைக் காசக்குடிச் செப்பேடுகள் வழங்குகின்றன.
4. கூரம் செப்பேடுகள் (உதயேந்திரம், வேலூர்ப் பாளையம்) பல்லவர்களைப் பற்றிப் பேசுகின்றன.
5. முதலாம் ஆதித்த சோழனைப் பற்றிய செய்திகளை அன்பில் செப்பேடுகள் தருகின்றன.
6. லீடன் மற்றும் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் ராஜாதித்த சோழனின் வீரமரணத்தைக் கூறுகின்றன.
7. உத்தம சோழன் பற்றிய செய்திகளடங்கிய செப்பேடுகள் சென்னை அருங்காட்சியத்தில் உள்ளன.
8. முதலாம் இராஜேந்திர சோழனின் வடபுலவெற்றியினைத் திருவாலாங்காட்டுச் செப்பேடுகள் பதிவு செய்துள்ளன.

இந்திய வரலாற்று நூல்களில் தொடர்ந்து தமிழகம் புறக்கணிக்கப்பட்டு வந்தமைக்குத் தமிழக வரலாற்றுக்கான போதுமான ஆதாரங்கள் மிகக்குறைவாகக் கிடைத்தமையே என்ற கருத்து உண்டு, ஆகையால் கல்வெட்டுகள், செப்பேடுகள், பட்டயங்கள் ஆகியனவற்றை உறுதியான சான்றுகள் ஆகக் கொள்வதில் நிறைய அர்த்தம் இருந்தது.

பல்வேறு காலகட்டங்களைச் சார்ந்த இச்செப்புப் பட்டயங்களும் ஏடுகளும் நம் தமிழக வரலாற்றுக்கான செய்திகளைத் தந்து உதவின. கொடைகள், நிவந்தங்கள், அரசாணைகள். நிபந்தனைகள் என அவை மன்னர்களால் வெளியிடப்பட்டவை.

வேள்விக்குடி, சின்னமனூர்ச் செப்பேடுகள், திருவாலங்காட்டுச் செப்பேடுகள், கூரம் செப்பேடுகள் ஆகியன பிற்காலச் சோழ, பாண்டியர், களப்பிரர் பல்லவர் பற்றிய குறிப்புகளைத் தந்துள்ளன. பல்லவர்களின் வரலாற்றைக் குறிப்பிடும் கராக்கி செப்பேடுகளும் மிக முக்கியத்துவம்

வாய்ந்தவை. இவை சாவிக் கொத்துக்களைப் போலக் கோக்கப்பட்டும், பட்டயங்களாவும் திகழ்கின்றன.

**தமிழர் தம் நெடிய பண்பாட்டு வரிசையில் "சைவம்" தழைத்தோங்கியமையை பற்றி**

சிவனை இறைவனாக வணங்கத் தொடங்கிய திராவிட இனத்தவரின் ஆதி சமயம் சைவம். சிந்து சமவெளி நாகரிக மக்களின் வழிபாடாக இருந்ததும் தமிழர் தம் இறைவணக்கமுமான சைவ சமயம் பற்றிய செய்திகள் நிறைய உள்ளன.

"சிவம்" என்றால் "சிறந்தது" என்று பொருள். "ஆலமர் செல்வன்" "முக்கண் கடவுள்" "திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள்" எனச் சங்கப் பாடல்கள் சிவனைப் பதிவு செய்துள்ளன.

களப்பிரர் காலத்தில் சமண-பௌத்த சமயத் தாக்கங்களால் மங்கி நின்ற சிவநெறியினைத் தழைக்கச் செய்த பெருமை நாயன்மார்கள் எனப்படும். சிவனடியார்களையே சாரும். அப்பர், திருஞான சம்பந்தர், சுந்தரர் மாணிக்க வாசகர் உள்ளிட்ட 63 அடியவர்கள் 6, 7, 8ஆம் நூற்றாண்டுகளில் தோன்றிச் சைவம் தழைக்க அரும்பணியாற்றினர். சைவநால்வருள் முதல் மூவர் இயற்றிய பாடல்கள் தேவாரம் என்ற பெயரில் நம்பியாண்டார் நம்பியால் தொகுக்கப்பட்டன. புறச்சமய வழிபாட்டில் ஈடுபட்ட தமிழர்களை இசையோடு கூடிய தேவாரப் பாடல்கள் மீண்டும் சைவத்திற்கு மடை மாற்றம் செய்தன.

சைவ சித்தாந்தம் சைவத்தைப் பெருவாரியான மக்களிடையே வழங்கலாயிற்று.

பதி, பசு, பாசம் என்ற சைவ நெறி, விளக்கம் பெற்றது. காமம், சினம், ஆசைகளை விட்டு விலகும் உயிர் (ஆன்மா) இறைவனை அடையாளம் என்ற சித்தாந்தம் வெற்றி நடை போட்டது. சமணம் சார்ந்த மகேந்திரவர்மன், மீண்டும் சைவத்திற்கு மாறினாள்.

மதுரைக் கூன்பாண்டியன், திருஞான சம்பந்தரின் தீவிர முயற்சியால் சைவம் தழுவி நின்றசீர் நெடுமாறன் ஆனான்.

சைவம், அன்பே கடவுள் என்ற கொள்கையை வலியுறுத்தியது.

திருமூலரின் திருமந்திரம், வாழ்க்கை விளக்கங்களை மறைபொருளாக விவரித்தது.

நடராஜர் திருமேனி, பிரபஞ்ச இயக்கத்தைக் குறியீடாக உணர்த்தி உலக் கலை வரலாற்றில் ஒப்புயர்வற்றுச் சிறந்தது.

சைவம், மானுடக் குடும்ப வாழ்வினை இறையோடு கலந்து வழங்கியது. சிவன், சக்தியுடன் இணைந்து அம்மையப்பனாக இல்லறத்தார்க்கு வழிகாட்டினான். அகவாழ்வைப் புறந்தள்ளி முக்தி சொன்ன புறச்சமயங்களைப் பின் தள்ளித் தமிழக உரிமைச் சமயமாய்ச் சைவம் தழைத் தோங்குகின்றது.

தமிழர்களின் தொன்மைச் சமயம் சைவம், சிவனை முழுமுதற்கடவுளாக ஏற்றுக் கொண்டவர்கள் தமிழர்கள். “மிகச் சிறந்தது” என்ற பொருளில் “சிவம்” சைவம் ஆளப்பட்டிருக்க வேண்டும். “சிவலிங்க வடிவமே” ஆண்-பெண் (சிவம் சக்தி) இணைவுகளின் குறியீடு என்பது பரவலான ஒரு கருத்து, சிவனை ஆண்மையாகவும் சக்தி அல்லது ஆற்றலைப் பெண்மையாகவும் கொண்டு உலக இயக்கமே “ஆண்-பெண்” இயக்கத்தில் தான் உள்ளது என்பது கருத்து.

“சக்தி இன்றேல் சிவமில்லை, சிவமின்றேல் சக்தியில்லை” ஏ்னற முழக்கமும் இதனை வெளிப்படுத்தும்.

“சைவம்” ஒரு சித்தாந்தமாக உருப்பெற்றது பிற்காலக் கொள்கை. “பதி-பசு-பாசம்” என்ற பிரிவுகள் சைவ சித்தாந்தத்தைக் குறிப்பன.

சைவம், கலைகளுக்கு வாழ்வு தந்தது. நாயன்மார்கள் நலிவுற்ற கலைகளைத் தட்டி எழுப்பினர். “தேவாரம்” தமிழ்ப் பண்ணிசைக் களஞ்சியமாகத் திகழ்கின்றது. “எனக்கு அருச்சனை பாட்டேயாகும்” என்று இறைவன் சுந்தரரிடம் கூறினாராம். ”ஏழிசையாய் இசைப்பயனாய் என்னுடைய தோழனுமாய்” என்று இறைவன் இசைவடிவாய் விளங்குகிறான் சைவத்தில்.

சைவம், துறவறத்திற்கு முக்கியம் தரவில்லை. இல்லறத்தைப் போற்றுகிறது. அடியவர்களில் ஓரிருவர் தவிர மற்றையோர் இல்லறவாசிகளே. சைவம், தமிழகத்திற்குத் தந்த விலைமதிப்பற்ற பரிசு, சைவ மட்டங்கள். இறைவனையே அம்மையப்பனாகக் கண்டது சைவம்.

சிற்றின்பம் வழியாகப் பேரின்பத்தை அடைய வழிகாட்டுவது, சைவம். தமிழரின் அடிப்படை நாகரிகத்தைக் கட்டிக்காத்தது சைவம்.

"அன்பே சிவம்" என்ற அரும்பெரும் கொள்கையை உலகுக்குத் தந்த சைவம், தமிழர்களின் நீண்ட நெடிய வரலாற்றில் பின்னிப் பிணைந்துள்ளது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை!

**சைவ சமயத்தில் நிலவும் உட்பிரிவுகள்**

அன்பையும் அருளையும் பேசும் சைவத்தில் அதிதீவிரப் பற்றுடைய அடியவர்கள் பலர் சிவனைப் பல்வேறு அவதார நிலைகளில் போற்றிப் பரவினர். அறுவகைப் பிரிவுகளைப் பற்றி இவண் காண்போம்.

1. **பாசுபதர்:** இவர்கள் "மயேச்சுரர்" எனப்படுவர். உடல் முழுக்க திருநீறு பூசுவர். சிவனே முழுமுதற் கடவுள் என்பர். மொட்டையடித்து நிர்வாணமாகத் திரிவர்.
2. **காபாலிகர்:** சிவனின் அவதாரமான பைரவரை வழிபடுவர். மயிர்ப்பூணூல் அணிந்து மண்டையோட்டு மாலையணிவர். பெண்களை ஆதி சக்தியாக வழிபடுவர். இப்பிரிவினரில் பெண்களும் உண்டு.
3. **காளாமுகர்:** தம்மை மறந்து சிவனை ஆடிப்பாடியிருப்பர் சமூகத்தில் உயர் மதிப்புடையவர் இப்பிரிவினர்.
4. **கௌமாரர்:** சைவப் பிரிவினரில் முருகனை மட்டும் வழிபடும் நெறியினர் இவர்கள்.
5. **சாக்தர்**: சக்தி வழிபாட்டையே முதன்மையாகக் கொண்ட நிலையினர் இவர்கள்.
6. **சைவர்/வீரசைவர்:** ஆழ்ந்த பக்திநெறியில் சிவனை வழிபடும் சீலர்கள். கர்நாடக மாநிலத்தில் வீர சைவர்கள் மிகுதி. தமிழகத்தின்

பல ஊர்களில் மடங்கள் அமைத்துச் சைவம் தழைக்கப் பணியாற்றி வருகின்றனர்.

தீவிர சைவர்களாக விளங்கிய இவர்கள் அறிவைப் பின்னுக்குத் தள்ளிச் சிவநெறியை வெறியாக்கி உணர்ச்சி மேலிட்டு தலைமழித்துத் தாடி வளர்த்து உடலெங்கும் திருநீறு பூசி எலும்புகளை மாலையாக அணிந்து வேறுபட்ட தோற்றங்களில் சாமானிய மக்களை வெருட்டினர்.

காசியில் வாழும் அகோரிகள் இவ்வகையினரே, எவ்விதத்திலும் ஏற்றுக் கொள்ளஇயலாத கோலங்கள், செயல்பாடுகளால் மக்களின் அருவெறுப்புக்கு ஆளாயினர்.

ஆடையின்றி அலைதல், சுடுகாட்டில் பிணம் தின்னுதல், வெறியாட்டம் என்பனவெல்லாம் இவ்வகையினர் பொய்யாகவோ மெய்யாகவோ புனைந்த கோலங்கள்! சைவத்தில் தீவிரம் என்பது அவர்களாகவே உருவாக்கிய அறிவுக்கப்பாற்பட்ட வழிமுறைகள். பெருமக்களின் ஆதரவினை இவர்கள் பெறவில்லை என்பதே உண்மை.

**பக்தி நெறியில் வைணவம் ஏற்படுத்திய தாக்கங்கள் தமிழகத்தில் நிலவும் வைணவப் பிரிவுகள்**

வைணவ நெறியினர், திருமாலை முழுமுதற் கடவுளாக வழிபடும் நெறியினர். திருமாலின் தாமரைத் திருவடிகளைச் சரணடைவதையே இலக்காகக் கொண்டவர்கள்.

"சரணாகதி" (Complete Surrender)யே வைணவம். இறையன்பில் ஆழ்ந்து அடியரவர்கள் பாடிய தீந்தமிழ்ப் பாடல்கள் "பாசுரங்கள்" ஆகும். ஆழ்வார்கள் 12 பேர் பாடிய தெய்வப் பனுவல் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம். நம்மாழ்வார் வேதம் தமிழ் செய்த மாறன் ஆக விளங்குகிறார். பெரியாழ்வாரும், குலசேகரரும் கண்ணனைக் குழந்தையாக்கித் தாயாகின்றனர். மன்னர் மரபில் வந்த திருமங்கையாழ்வார் கண்ணனைக் குழந்தையாக்கித் தாலாட்டுகிறார்.

ஆண்டாள், “மானுடர்க்கென்று பேச்சுப்படின் வாழகில்லேன்” என அரங்கனையே ஆராதித்துச் சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாகவும், கோதை நாச்சியாராகவம் திகழ்கிறார். அவர் பாடிய திருப்பாவை, இன்றளவும் வெகு ஜனங்களால் மார்கழி வைகறையில் பாடிப் பரவப்படுகிறது. அவரின் நாச்சியார் திருமொழி, கண்ணனை நாயக-நாயகி பாவனையில் அணுகி தெய்வீக அகநூலாக விளங்குகிறது. தமிழகம் மட்டுமன்றி ஆண்டாள் இந்தியாவெங்கும் போற்றப்படும் இன்னொரு மீராவாக மதிக்கப்பெறுகிறார்.

பெரியாழ்வாரின் “மாணிக்கம் கட்டி வயிரம் இடைக்கட்டி” என்ற தாலாட்டிற்கு மயங்காத தமிழரே இல்லை.

**வடகலை:** வேதங்களின் சடங்குகளைப் பின்பற்றும் பரம்பரையைத் தோற்றுவித்த வேதாந்த தேசிகர் கொள்கையைப் பின்பற்றும் இவ்வைணவப் பிரிவினர் வடகலையினர்.

**தென்கலை:** இறைவனைச் சரணடைவதே ஆன்மாவின் பணி; கடவுளே காப்பவர் என்ற கொள்கையைச் சொன்ன பிள்ளை லோகாச்சாரியாரின் வழியினைப் பின்பற்றுபவர்கள் இப்பிரிவினர். இவர்கள் வைணவ வழிபாட்டில் ஆழ்வார்களின் பாசுரங்களால் மட்டுமே பாடிப் பரவுவர்.

வடநாட்டினரால் “விஷ்ணு” என்று அழைக்கப்பட்டமையே வைஷ்ணவம், தமிழில் வைணவம் ஆனது. அறிஞர் பாவாணர் “திருமாலியம்” என்பார். சங்க நூல்களில் திருமால் பற்றிய புராணச் செய்திகள் பல உள்ளன.

“நாராயணா என்னா நாவென்ன நாவே” என்பது சிலம்பு. திருமலையில் நின்ற கோலத்தையும் திருவரங்கத்தில் கிடந்த கோலத்தையும் பேசுகிறது சிலப்பதிகாரம். “மாயோன்” என்கிறது தொல்காப்பியம்.

பரிபாடலில் வாசுதேவன் நாராயணனொடு இணைத்துக் கூறப் பெறுகிறான். இப்பாடலில் திருமாலின் அவதாரச் செய்திகளும் குறிக்கப்படுகின்றன. மாதவியின் பதினோராடல்களில் கொடுகொட்டி, மல்லாடம், பாண்டரங்கம் முதலியன கண்ணனுக்கு உரியன. ஆய்ச்சியர் குரவையில் கண்ணன் பாடப்படுகிறான். வைணத்திருத்தலங்கள் 108 ஐயும்

கண்டு மங்களாசாசனம் செய்தவர், திருமங்கையாழ்வார். ஆழ்வார்களின் பாடல்கள் பலவும் திருமாலின் அவதாரப் பெருமைகளையே பேசுகின்றன.

ஆழ்வார் பாசுரங்களில் தலை தூக்கி நிற்பது, "தாசபாவம்", ஆண்டான் – அடிமை உண்ர்ச்சியேயாம். இறைவனுக்குரிய கைங்கரியம் செய்வதில் தாம் ஆழ்வார் முனைந்து நின்றனர். இறைவனுக்கருகில் இருப்பது, வீடு பேற்றிலும் மேலானது என்பார் நம்மாழ்வார்.

அருளைப் பெறுவது பற்றி ஆழ்வார்கள் கருத்து எதுவெனில் இறையருளை முயன்று பெற முடியாது, இறைவனாகப் பார்த்தருளுவது என்பது மற்றொரு கோட்பாடு. ஆழ்வார்களின் பாடல்கள் உணர்ச்சியை மேலாகக் கொண்டவை. எனவே அவற்றில் அறிவைத் தேடலாகாது.

வைணவ வரலாற்றில் சிறப்பிடம் பெற்ற மத்துவாச்சாரியார், உலகம் வெறும் தோற்றமே என்ற ஆதிசங்கரரின் கொள்கையை எதிர்த்தார். எண்ணற்ற உயிர்கள் எல்லாம் தம் ஈடேற்றத்திற்காகவே இறைவனைச் சேர்த்துள்ளன. பக்தியே ஈடேற்றம் அளிக்கும். திருமால், திருமகள் இரண்டிலும் கடவுள் உளளார் என்றார்.

வைணவம் வடமொழிக்கு எந்தளவிற்கு உதவியதோ அதனையும் தாண்டித் தமிழுக்குத தந்த கொள்கைகள், கோட்பாடுகள், தீந்தமிழ்ப் பாசுரங்கள் காலமென்னும் கடும் வெள்ளத்திலும் எதிர்நீச்சலிட்டுக் கரை சேர்வன.

### வைணவ சம்பிரதாயத்தில் இராமானுஜர் ஏற்படுத்திய மாற்றங்கள்

வைணவப் பரம்பரையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களையும் சீர்திருத்தங்களையும் கொண்டு வந்த மேதை இவர். தென்னாட்டின் வைணவம் இந்தியா முழுமையும் பரவப் பணியாற்றிய பெருமகன் இவர். இந்து சமயச் சீர்திருத்தவாதி. ஆண்டவன் முன் அனைவரும் சமம் என்று அறைகூவல் விடுத்தவர். யாதவப் பிரகாசரின் மாணவர்; பெரியநம்பியின் உடன்மாணவர். பிரம்ம சூத்திரத்திற்கு உரை செய்தவர். ஆதிசங்கரரின் சமய, இறைக் கொள்கையே மறுத்தவர்.

பெருமாள் வழிபாட்டிற்கான சடங்குகளும் வழிமுறைகளும் ஒழுங்கற்றுக் கிடந்தமை கண்டு மனம் வருந்தித் தாமே உருவாக்கிய வழிமுறைகளின் படி நின்றவர். இன்றைக்கும் இவரின் சடங்குச் சம்பிரதாயங்களே இந்தியாவெங்கும் உள்ள வைணவத் தலங்களில் பின்பற்றப்படுகின்றது. திருமலை-திருப்பதியிலும் இவரின் கொள்கை வழியே கடைபிடிக்கப் படுகிறது.

சமூகத் தாழ்நிலையிலிருந்த பஞ்சமர் சமூகத்திற்கு "நமோ நாராயணா" என்ற திருமந்திரத்தை ஓதி அனைவரையும் சமப்படுத்திய வைணவ சன்மார்க்கி இவர்.

**19ஆம் நூற்றாண்டில் தமிழகம் கண்ட சன்மார்க்க சங்கம்**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவெங்கும் சாதி சமய வேறுபாடுகள் தலைவிரித்தாடின. சோழர் கால வலங்கை – இடங்கைக் குலங்களுக்கு நிகரான அளவில் இல்லாவிடினும் மக்களிடையே நிலவிய ஒற்றுமையுணர்வு சமூக அளவில் சுமூக நிலையில் இல்லை. தமிழகமும் இதற்கு விதிவிலக்கன்று.

1823, அக்டோபர் 5இல் சிதம்பரத்திற்கடுத்த மருதூரில் ஓர் ஒளி உதயமானது. வடநாட்டில் இராமகிருஷ்ண பரமஹம்சர் தோன்றிய அதே கால கட்டத்தில் தென்னாட்டில் இராமலிங்கர் தோன்றினார்.

சாதிகள், சமயம், பழைமை சார்ந்த மூட நம்பிக்கைகளை இராமலிங்கர் வெறுத்தார். ஓதாது உணர்ந்த இறையருள் பெற்ற இராமலிங்கர். சமயங்கள் அனைத்தும் சமம் என்றார். சமூகத்தில் சமநிலையும் சகோதர உணர்வும் நிலவ ஆசைப்பட்டார். பசியைப் போக்குதலே தலையாய அறம் என்றார்.

**ஒருமையுணர்வு:** பொங்கு பல சமயமெனும் நதிகள் எல்லாம் புகுந்து கலந்திடும் அருட்கடலாக இறைவன் விளங்குகிறார் என்றும், ஜீவகாருண்யமே பேரின்ப வீட்டின் திறவுகோல் என்றும் கூறினார். சிறு தெய்வ வழிபாடுகளை விடுத்து, அருட்பெருஞ்ஜோதியான இறைவனை மக்கள் வழிபட ஆவல்

கொண்டார். அவனின் தனிப்பெருங்கருணையே உலகை உய்வித்து வழி நடத்தும் என்றார்.

**திருவருட்பா:** இறைநிலையில் அவர் பாடிய ஆயிரக்கணக்கான பாடல்களின் தொகுப்பு திருவருட்பா. இறைநிலை, வாழ்வியல் இலக்கு, அன்பு, அருள், தமிழின் மேன்மை எனப்பாடப்பட்ட இந்நூல் ஆறு திருமுறைகளாகப் பகுக்கப்பட்டது. இன்றும் தமிழர்களின் இல்ல வழிபாடுகளில் அருட்பெருஞ்ஜோதி அகவல் ஓதப்படுகிறது.

**அமைப்புகள்:** மக்கள் ஒருமை உள்ளத்தவராய் உலகியல் நடத்த வேண்டும் என்ற பேரவாக் கொண்டு எச்சமயத்தவரும் எந்நாட்டினரும் ஏற்கும்படியான “சமரச சுத்த சன்மார்க்கம்” என்ற அமைப்பை நிறுவினார்.

**ஞானசபை:** பேரின்பநிலையை அடையத் தடையாய் இருக்கும் மாயத் திரைகளை விலக்கினால் அருள் ஒளி அடையலாம் என்ற உண்மையை உணர்த்தும் அறிவுத் திருக்கோயிலை வடலூரில் “ஞானசபை“ யாக நிறுவினார். ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் தங்கள் வேற்றுமை மறந்து ஒன்றுபட இச்சங்கமும், சபையும் காரணி ஆனது.

**சத்திய தருமச் சாலை:** “வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய“ வள்ளல் பெருமான் மானுடர் பசியைப் போக்கும் வண்ணம் அறச்சாலை ஒன்றை நிறுவி அடுப் பேற்றினார். அன்று அடிகள் ஏற்றிய அடுப்பின் கனல் இன்று வரை தனல் குறையாது பசிப்பிணி மருத்துவமனையாக விளங்கி வருகிறது.

தமிழ் மாந்தரின் தொன்மை இயற்கை வழிபாட்டிற்கு மக்களைத் திருப்பிச் சமரசம் போதித்த அடிகள் 1874, தைப்பூசநாளில் இயற்கையுடன் இயைந்தார்.

**இங்கித மாலை:** தமிழின் அகத்துறை மரபில், நாயக-நாயகி பாவனையில், வள்ளலார் பாடிய தெய்வீக நூல் “இங்கித மாலை“. இன்றுவரை தமிழ் இலக்கண – இலக்கியவாதிகளின் உரைகல்லாக விளங்குவது இந்நூல்.

## 19 ஆம் நூற்றாண்டில்

திருவருட்பிரகாச வள்ளலார் உயர்த்திப் பிடித்த சமய நெறி இந்து சமயத்தின் தீவிர நிலையினர்க்கு வியப்பைத் தந்தது. பல்உருவ வழிபாடுகளையும், சிறுதெய்வ நெறிகளையும் பின்பற்றிய பலர், அடிகளின் சமயப்புரட்சி கண்டு மருண்டனர். இடைக்காலத்தில் "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ற திருமூலர் நெறியினையே அடிகளார் விரிவாக்கம் செய்தமையை அறிவார்ந்தோர் ஏற்றனர். இருட்சாதித் தத்துவம், சாத்திரக் குப்பைகள், கண்மூடிப் பழக்கம் எல்லாம் மண்மூடிப் போக அவர் பாடிய எண்ணற்ற பாடல்கள் இறைநிலையில் பிறந்து அருட்பாவாகின. ஆனால் அன்றுதொட்டு இன்றுவரை அடிகள் உயிர்ப்பித்த சமரச சன்மார்க்கம் நீர்த்துப் போகவில்லை, தொடர்கிறது. அருட்பெருஞ்சோதியான இறைவன், உயிர்களின் ஒன்றுடன் ஒன்றான தனிப் பெருங்கருணையில் வாழ்கிறான் என்பது, நிதர்சன உண்மை.

## தமிழகக் கல்வெட்டுகளில் காணப்படும் "பிராமி" எழுத்து, சடகோபன், வலங்கை – இடங்கைப் பிரிவுகள் பற்றி

**"பிராமி" எழுத்து** : இதனைப் புத்தர் கண்டறிந்தார் என்பர். அசோகர் காலத்தில் வழக்கிற்கு வந்தது. பாண்டிநாட்டுக் குகைக் கோயில்களிலும் பாறைகளிலும் இம்முறை எழுத்துகள் காணக்கிடக்கின்றன. மொழியில் தமிழாகவும், எழுத்தில் பிராமியாகவும் Transliteration முறையில் இக்கல்வெட்டுகள் விளங்குகின்றன. பழந்தமிழ் எழுத்துகள் பிராமி மூலமே "வட்டெழுத்து"களாக மாறின.

பிராமியிலிருந்து புத்த-சமண மதத்தவர் புதிய கிரந்தத்தை உருவாக்கினர். சோழர்களின் பாண்டிய நாட்டுப் படையெடுப்பின் போது, வட்டெழுத்து, கிரந்தத்திற்கு மாற்றப்பட்டது. பிராமி, தாமிழி என வழங்கப்பட்டது.

**சடகோபன்**: பன்னிரு ஆழ்வார்களில் இவரே நம்மாழ்வார் என்பவர். வேதம் அனைத்திற்கும் வித்தாக இவரின் பாசுரங்கள் உள்ளன வாகையால் "வேதம் தமிழ் செய்த மாறன்" ஆக விளங்குகிறார். "உண்மை பக்தனுக்குச்

சடங்குகள் தேவையில்லை; இறைவன் மீதான தன் உணர் அன்பே மோட்சமடைய வழி; அதுவே "பரபத்தி நிலை" என்பது இவரின் கொள்கை. இறைபக்தி ஆண்-பெண் நிலை கடந்த ஒன்று என்றார். "முழுமையாகச் சரணடைதலே உலகாயகத் துன்பங்களில் இருந்து விடுதலை பெற வழி" என்பது சடகோபரின் நியாயம்.

**வலங்கை - இடங்கைப் பிரிவுகள்**: பல்லவர் காலத்தல் அரும்பிப் பின் சோழர் காலத்தில் வேரூன்றிய குலப்பிரிவுகள் இவை. ஒவ்வொன்றிலும் 98 வகைச் சாதிகள் இருந்தன என்பர்.

அரசிடம் இருந்து பெறும் மரியாதை, மானியங்கள் தொடர்பாக இவ்விரு பிரிவினர்க்கும் இடையே ஜென்மப்பகையாக வளர்ந்த சண்டை – சச்சரவுகள் சோழப் பேரரசின் சமூகநிலைப் பாட்டிற்குக் கரும்புள்ளியாக அமைந்தன. சமுதாய மட்டத்தில் இரத்த ஆறு ஓடிய காலகட்டம் இது என்பர் வரலாற்று ஆசிரியர்கள்!.

1. இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள, காலத்தால் மிகப் பழைய கல்வெட்டுகள் அனைத்தும் பிராமி வரி வடிவிலேயே உள்ளன. இன்று உள்ள தமிழின் வரிவடிவமும் பிராமியிலிருந்தே தோன்றியிருக்க வேண்டும் என்கிறார், டி.வி. மகாலிங்கம்.

2. திரு. நடனகாசிநாதன், "பிராமி" எழுத்தைத் "தமிழி" என்றும், சங்க நூல்கள் இவ்வெழுத்துகளில் தாம் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்றும் கூறுகிறார்.

3. தமிழகத்துக் குகைக் கல்வெட்டுகள் அனைத்தும் "பிராமி" வடிவில் இருந்தாலும், அவை வடநாட்டில் வழங்கிய பிராமி வகையிலிருந்து வேறுபட்டுள்ளது. தமிழ் எழுத்து, பிராமியிலிருந்த தோன்றியது எனக்கருதாது, தென் பிராமியிலிருந்து தோன்றியது என்று கருதுவதே சிறந்தது என்பர் ஆய்வாளர்.

தென்தமிழகத்தில் 14,15 ஆம் நூற்றாண்டுகளில் தோன்றிய, பெருவழக்காக இருந்த வட்டெழுத்தும் பிராமியிலிருந்தே தோன்றியது என்கிறார் டி.ஏ. கோபிநாதராவ்.

பழைமையான வட்டெழுத்துகளில் இருந்தே இன்றைய தமிழ் தோன்றியிருக்க வேண்டுமென்றும், பிராமியிலிருந்து தமிழ் தோன்றவில்லை என்கிறார், திரு. மு.வ. அவர்கள்.

ஆனால், பிராமிக் கல்வெட்டுகள் தோன்றியதற்கு முன்பே, தோன்றிய தொல்காப்பியமும் சங்கநூல்களும் திட்பமும் நுட்பமும் வாய்ந்தவை.

வலங்கை – இடங்கை :- பல்லவர் காலத்தில் ஆங்காங்கே தோன்றிப் பின் சோழர் காலத்தில் சமூகத்தில் வேரூன்றிவிட்ட இம்முறை, சோழ அரசர்கள் காட்டிய, மற்றும் பின்பற்றிய மனு தர்மக் கோட்பாட்டின் விளைவு எனலாம். ஒரு குலத்துக்கொரு நீதி சொன்ன மனுதர்ம நெறியினின்று சிறிதும் பிசகாமல், நிலவுடைமைச் சமூகமும் அல்லாதோரும் பிளவுபட்டு நின்றதன் பின்னணியே இவ்வகைக் குல வேறுபாடுகள்.

எண்ணற்ற தொழிற் குழுக்கள் நிலவிய சங்ககால அமைதிச் சூழல், பிற்காலச் சோழர்காலத்தில் இல்லாமற் போனதற்கு இவ்வகைப் பொருளியல் சமநிலையின்மையும் காரணமாகலாம்.

இலங்கையினர் பெரும்பாலும் வணிகராகவும், பிற தொழிலாளராகவும் இருக்க, வலங்கையினர் படைகளில் அதிகராம் பெற்றிருந்தனர். சில குலத்தினர் ஒன்று கூடி அரசியல் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

இவர்களே யன்றி இரதகாரர் என்பாரும், அநுலோமர்களும் இருந்தனர். மாகிஷ்யர்கள் எனப்படும் பிரிவினர் இருந்தனர். வைசியத் தந்தைக்கும் சூத்திரத் தாய்க்கும் பிறந்தவர்கள் கருணீகர்கள். குலங்கள் ஒன்றொடொன்று கலந்தமையால் நூற்றுக் கணக்கில் சாதிகள் பெருகிவிட்டன.

மிக உயர்ந்த ஆட்சி, நீரியல் நிர்வாகம், அரசியல் ஆளுமை, கலைப்படைப்புகள் எனத் தலைநிமிர்ந்து நின்ற சோழர் சமுதாயம், கி.பி. 13 ம் நூற்றாண்டுச் சமுதாய நிலைமையில் தடம் மாறியது என்பதே உண்மை!

**பழந்தமிழர் நம்பிக்கைகள்**

1. பல்லியின் ஒலிப்பயனை நம்பினர்; குயில் கூவதல், ஆந்தை அலறல் ஆகியவற்றில் பலன் கண்டனர்.
2. கொடிநிலை, வள்ளி, கந்தழி ஆகிய சமயச் சடங்குகளில் ஊறி நின்றனர்.
3. இடுகாட்டில் பேய்கள் தலைவிரித்துக் குருதி தடவும் என்றும், அவைகள் பிணம் தின்னும் என்று நம்பினர்.
4. இம்மை – மறுபிறப்பில் உறுதியுடன் இருந்தனர்.
5. நல்வினை – தீவினை விளைவுகள், சுவர்க்கம், விதி இவற்றில் ஆழ்ந்திருந்தனர்.
6. கொற்றவை வழிபாடு, ஆற்றலையும் வெற்றியையும் தருவதாக எண்ணினர்.
7. மன்னனின் காவல் மரம், தங்கள் குலம் காக்கும் என்றெண்ணி அதற்கு ஊறு நேராதபடி நடந்தனர்.
8. இல்லத்து நன்னிகழ்வுகள் தொடர்பாக விரிச்சி கேட்டனர்.
9. வெள்ளி வடதிசையில் உதித்தால் வளம்; தெற்கில் தோன்றினால் பஞ்சம் என்றனர்.
10. போர்க்காலத்தில் உன்னமரம் தழைத்தால் வெற்றி, வாடினால் தோல்வி எனக் கருதினர்.
11. பெண்களுக்கு இடக்கண்ணும் ஆணுக்கு வலக்கண்ணும் துடித்தால் நன்மை என நம்பினர்.

மேலும் வீட்டுவிலக்கான பெண்கள் புனிதப் பொருட்களைத் தீண்டலாகாது என்றும், தீண்டின் தீங்கு நேரும் என்றும் நம்பினர். அவர்கள் “கலந்தொடா மகளிர்” எனப்பட்டனர்.

பேயின் அச்சத்திலிருந்து விடுபட இரவம், வேம்பு இவற்றின் தழைகளை வீடுகளில் செருகினர். வெண்சிறுகடுகைப் புகைத்தனர். காஞ்சிப் பண்ணைப் பாடினர். தூபம் எடுத்தனர்.

வெள்ளிமீன் வடதிசையில் இருப்பின் வளமென்றும், தென்திசையில் இருப்பின் வற்கடமாகிய பஞ்சம் என்றும் நம்பினர். தூமகேது என வால் நட்சத்திரம் ஆள்வோர்க்கு ஆகாது என்ற நம்பிக்கை இருந்தது.

சிலம்பின் "கனாத்திறமுரைத்த காதை" வழி, தமிழர்கள் காணும் கனவுகளுக்கு அர்த்தம் கற்பித்தனர் என அறியலாம்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனின் பகைவர் கனவுகண்டு அஞ்சினர். வற்றல் மரம் தீப்பற்றவும், ஞாயிறு பலவாகத் தோன்றவும், புட்கள் ஆரவாரம் செய்யவும், பல்கழன்று வீழவும், தலையில் எண்ணெய் வார்க்கவும், கோட்டுமா ஊரவும், படைக்கருவிகள் கட்டிலொடு சாயவும் கனவு கண்டனராம்.

எல்லா நாட்டிலும் எக்காலங்களிலும் நிலவும் இவ்வித நம்பிக்கைகள், மூடத்தனத்தின் முடைநாற்றம் என ஒதுக்கிவிட இயலாதபடி எங்கும் பரவியிருந்தன என்பது தெளிவு.

**பண்டைத்தமிழரின் வானியல் அறிவு**

அறிவியலின் அனைத்துப் பிரிவுகளிலும் சிறந்து விளங்கிய தமிழர் வானியல் அறிவிலும் மேம்பட்டு நின்றனர்.

1. "நிலம் நீர் தீ வளி விசும் போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்" – என்ற தொல்காப்பிய நூற்பாவழி, தமிழரின் பிரபஞ்ச அறிவு தெரிய வருகிறது.
2. "மணி திணிந்த நிலமும் நிலன் ஏந்திய விசும்பம்" என்ற புறப்பாடல் மூலம் பஞ்சபூதங்களைப் பற்றிய வளமையான முடிவுகளில் சிறந்தனர் தமிழரென அறியலாம்.
3. "சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்" என்ற குறள்வழி, உலகம் உருண்டை என்பதனைக் கி.மு.நூற்றாண்டுகளில் தமிழர் அறிந்த திறம் தெரிகிறது.
4. ஞாயிறு, திங்கள், மாமழை என்ற இயற்கை வணக்கம் உலக இயக்கத்தின் ஆதாரத்தைப் பேசுகிறது.
5. "செஞ்ஞாயிற்றுச் செலவும்" என்ற புறப்பாட்டு, வான்வெளி மண்டல ரகசியத்தை வெளிச்சமிடுகிறது.

6. தானாக ஒளிர்வதை நாள் மீன் என்றும், இரவல் ஒளி தருவனவற்றைக் கோள் மீன் என்றும் தமிழர் அழைத்தனர்.
7. சிகப்பு நிறக் கோளைச் செவ்வாய் என்றும், வெண்மை ஒளிர்வதை வெள்ளி எனவும், பதிதாகக் கண்டதால் புதன் எனவும் பெயரிட்டு அழைத்தனர்.
8. கந்தகம் நிறைந்த சனிக்கிரஹம் காரிக்கோள் என்றழைத்தனர்.
9. சூரிய குடும்பத்தின் மிகப்பெரிய கோள் வியாழன். வியா – பெரிய.
10. "வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று" என்ற ஆண்டாளின் தமிழ், அக்கால விண்ணியல் அறிவைப் புலமை செய்தது.
11. சிலேட்டர் என்பாரின் கூற்றுப்படி "தமிழரின் வானநூற் கணித முறையே வழக்கிலுள்ள எல்லாக் கணிதங்களிலும் சிறந்தது" என்பது உண்மை. தொல்காப்பியத்திலும் சங்க நூற்களிலும் இத்தகைய வானியற் கருத்துகள் நிறைய உள்ளன. பல்லாயிரம் ஆண்டுப் பழக்கவழக்கங்கள் பழைமையாக இருந்திருக்க வேண்டும்.
12. வல்ல அறிஞர், அறிவர், கணி, கணியன் என்ற பெயர்களும், பக்குடுக்கை நன்கணியார், கணிமேதாவியார் போன்ற புலவர்களின் பெயர்களும் சும்மாவாக வந்தனவல்ல.
13. பருவங்கள் ஆறு, பொழுதுகள் சிறு-பெரும் பொழுதுகள் ஆறாறு எனப் பிரித்த வகை ஆழ்ந்த அர்த்தமுடையது.
14. சித்திரை முதலாகத் தமிழ் ஆண்டுக் கணக்கைக் கணக்கிடுவது, 2500 ஆண்டுகளாக இருந்து வரும் நடைமுறை என்கிறார். கா.சு. பிள்ளையவர்கள்.
15. "திங்களும் நாளும் முந்து கிளந்தன்ன" என்ற தொடர் வானியலறிவின் செறிவைக் காட்டும். விண்மீன்கள், கோள்களின் நிறம், வடிவம் தமிழர்க்கு அத்துப்படியாக இருந்தன.
16. "ஆடித் திங்கள் பேரிருட் பக்கத்து
17. சுழல்சேர் திட்டத்து அட்டமி ஞான்று
18. வெள்ளி வாரத்து ஒள்ளெரி உண்ணும்" - கட்டுரை காதை, சிலம்பு என்ற அடிகள் மதுரை தீயால் உண்ணப்படும் நாளை முன்னமே தெரிவிக்கின்றது.

## தமிழர்கள் மறப்போரிலும் அறப்போர் புரிந்த திறம்

தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை காட்டும் போர்த்திணைகளும் துறைகளும் அறம் சார்ந்த வெளிப்பாடுகள் ஆகும்.

தாங்கள் இன்ன நோக்கத்திற்காகப் போருக்குச் செல்கிறோம் என்பதை உலகுக்கு உணர்த்தவே வெட்சி முதல் வாகை வரை பூக்கள் அணிந்து சென்றனர்.

படைக்கலன்கள் இல்லாப் பகைவரை இன்று போய் நாளை வா என்ற இராமனின் களக்கூற்று, தமிழர் கண்ட போர் இலக்கணத்தின் வெளிப்பாடே ஆகும்.

வெட்சிப் போரின் நோக்கமே பசுக்கள் போரில் மடியக் கூடாது என்ற உன்னத நோக்கமே ஆகும்.

பெண்கள், போர்க்களம் செல்லுதல் அக்கால வழக்கத்தில் முற்றிலும் தவிர்க்கப்பட்டு இருந்தது.

ஆவும் அந்தணரும் பெண்களும் பிணியுடையோடும் பொன்போற் பதல்வரைப் பெறாதவரும் போர்க்களம் நீங்குமாறு அரசர்கள் கேட்டுக் கொண்டனர்.

போரில் விழுப்புண் பட்டு மடிதலே மேல்; புறப் புண்பட்டுப் பிழைப்பது இழிவெனக் கருதினர்.

முதுகுடிப் பிறந்த பெண்டிரும், ஒரே மகனைப் பெற்ற தாயும் கூடத் தம் மகனைப் போருக்கு அனுப்பி நாடுகாக்கும் கடமை கொண்டு விளங்கினர்.

மகன் எங்கே எனக் கேட்டவருக்குத் தன் மகன் “தோன்றுவன் போர்க்களத்தில்” என்ற வீரத்தாயினை புறப்பாடல் காட்டுகிறது.

சங்கநாளில் நிலவிய, அடிக்கடி நிகழ்ந்த போர்களுக்கான காரணம் மூவரச மரபினரிடையே வழிவழியாக நிலவிய பகைமை, தத்தம்

குடிப்பெருமை நிலைநாட்டல், நாடுகளின் எல்லைகள் சரிவர வரையறுக்கப்படாமை ஆகியன எனலாம்.

மண்ணாசை, புகழ் ஆர்வம், போர்க்குறிக் குறிக்காயமே புகழின் காயம் என்ற எண்ணம், வீரயுகம் படைக்கும் வேகம், வீரசுவர்க்கம் என்ற நம்பிக்கை ஆகியனவும் காரணம் எனலாம்.

"ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும் உலகியற்கை" என்ற உளவியலால் உந்தப்பட்டு நிகழ்ந்த போர்களால் மறம் (பாவம்) ஓங்கி அறங்கள் மங்கிவிடும் என்ற எண்ணத்திற்கு இடம் கொடாமல், போர்முறைகளில் படிமுறை வளர்ச்சிகளைக் கண்டு அதனில் அறம் காத்தனர் தமிழர்.

தமிழகத்தில் மறவர், எயினர். மழவர். மள்ளர் என்ற மறக்குடியினர் இருந்தனர். இவர்கள் தொன்மையான குடியினர், இக்குடியினரின் வீரம் பாடுவதே, குடிநிலை, மூதின் முல்லை போன்ற துறைகளின் நோக்கம்.

ஆக்கள் காத்தல் (பசுக்களைக் கவர்தல்) என்ற போரின் முதல்நிலையே அறவழிப்பட்டதாக இருந்தது.

கோழைகள், மயிர்குலைந்தோர், பெண் பெயர் கொண்டோர், படைக்கலன் இல்லோர், ஒத்தபடை எடுக்காதோர் என இவர்களைத் தமிழ்ப்படைஞர் கொல்லார் என்பது நச்சினார்க்கினியரின் நயவுரை. எனவே தமிழர் மறப்போரிலும் அறம் கண்டனர் என்பதே முடிந்த முடிவு.

**"சடங்குகள்" தமிழ்ச் சமுதாயத்தில் இடம் பெற்ற பான்மை**

உலகின் எல்லா நாடுகளிலும் சம்பிரதாயங்களும் சடங்குகளும் நிறைந்துள்ளன. அன்றுதொட்டு இன்று வரை தமிழர்கள் கடைபிடித்த சடங்குகள் பற்றி இவண் காண்போம்.

1. **கரணம்/வதுவை:** திருமணத்திற்குத் தயாராகியுள்ள ஆண்-பெண் இருவரும் பிறப்பு, குடும்பம், அகவை, செல்வம் ஆகிய நிலைகளில் சமன் பெற்றமை வலியுறுத்தப்பட்டது. இக்காலத்து இம்முறை பொருத்தம் பார்த்தலாகப் பரிணாமம் பெற்றது.

2. மணமகன் மணமகளுக்குத் திருமணத்தின் போது பரிசம் அளிக்கும் வழக்கம் இருந்தது. பிற்காலத்தில் இம்முறை எதிர் மறையாகி வரதட்சணையாக மாறியது.
3. சமூகத்தில் களவுக் காதலில் ஏற்படும் அறக்கோடுகளின் மலிவால் முன்னோர் வதுவை என்ற திருமணச் சடங்கை ஏற்படுத்தினர்.
4. மணமக்களை நீராட்டிப் புத்தாடை அணிவகுத்து நெல், மலர், நீர் தூவி முதிய பெண்கள் வாழ்த்தினர். இந்நிகழ்வு தற்போது தாலி கட்டும் போது அட்சதை தெளிக்கும் சடங்காக ஆனது.
5. வேலன் வெறியாட்டின் போது, கிடாய் பலியிட்டு உதிரம் தூவுதல் வழக்கமாக இருந்தது.
6. குழந்தைகளுக்கு ஐம்படைத்தாலி அணிந்த பழமைநிலை, தற்போது குழந்தைகளுக்குக் காப்பிடுதல் ஆனது.
7. இறந்தோர் மீது வெள்ளாடை போர்த்தல், ஊரார் மாரடித்தல், ஒப்பாரி கூவல், கால்கழி கட்டில் ஆன பாடையில் கிடத்தல், மலர்மாலை அணிவித்தல், சாப்பறை முழக்குதல் எக்காலமும் மாறாதிருந்து வருகிறது.
8. இறந்தோர்க்கு எடுக்கும் போர் நினைவான "நடுகல்" வணக்கமே இக்காலத்திய கல்லெடுப்பு, கருமம் ஆதியாகிய சடங்குகள்.
9. போருக்குச் சென்ற ஆடவர், வெள்ளாடை உடுத்தியும், குடுமி கூட்டியும், வீரக்கழல் அணிதலும் மரபு.
10. திருமண நிகழ்வின் போது, மணமுழவு ஒலிக்கும் மரபு அன்றும் இன்றும் என்றும் நிலவும் மங்கள நிகழ்வாகும்.

நம்பிக்கைகள், செயலாக்கத்திற்கு வருகையில் தலைமுறை தலைமுறையாகச் செய்யப்படும் செயல்களே சடங்குகள். உலக மக்கள் அனைவரிடமும் இவ்வழக்கம் தொன்றுதொட்டு நிலவி வருகிறது. திருமணச் சடங்குகளில் பொருத்தம், பரிசம், சிலம்பு கழி நோன்பு, திருமண நாள் (திங்களும் ரோஹினியும் கூடிய நன்னாள்), முருகவேளுக்காக வேண்டி ஆடப்படும் வெறியாட்டு, குழந்தைக்கு ஐம்படைத்தாலி, புலிப்பல் தாலி கட்டுதல், பிணத்தின் மீது வெள்ளாடை போர்த்தல், உரிமை மகளிர்

மாரடித்தழுதல், வளையல் உடைத்தல், பாடை கட்டுதல், முதுமக்கள் தாழி, சுடுகாட்டில் உணவு படைத்தல், நடுகல் சடங்குகள், வாழ்த்தும் போது நெல்லும் முல்லைப் பூவும் சேர்த்துத் தூவி வாழ்த்துதல் எனப் பழந்தமிழர்தம் சடங்குகள் விளங்கின.

**தமிழர்களின் வாழ்வியலுடன் சித்தர்கள்**

தமிழ்ப் பண்பாட்டில் "பதினெட்டுச் சித்தர்கள்" என்ற பேச்சு வழக்கு மிகப் பிரபலம். சித்து – ஞானம், அறிவு, தன்னை அறிந்தவரே சித்தர்கள் என்பர். இந்து சமயத்தில் சித்தர்கள் அனைவரும் சைவம் சார்ந்தோராகவே உள்ளனர்.

"ஆதிசித்தர்" எனப்படும் திருமூலரின் பரம்பரையினர் இவர்கள். தங்களின் தவவலிமையால் எவ்வடிவும் எந்நிலையும் எடுக்கும் திறனுடையவர் இவர்கள்.

சரியை, கிரியை, யோகம், ஞானம், மருத்துவம், காயகற்பம், ரசவாதம், சோதிடம், மந்திரம், இந்திரசாலம் என அனைத்தும் கைவரப்பெற்றவர்கள் சித்தர்கள்.

வடநாட்டுக் கோரக்கர், அகத்தியர், இடைக்காடர், உரோமர், கொங்கணர், கருவூரார், சட்டைமுனி, போகர், இராமதேவர், அகப்பேய், அழுகணி, குதம்பை, கடுவெளி, பாம்பாட்டி என இவர்கள் பதினெட்டு பேர் தமிழகம் கண்ட சித்தர்கள். மரணம் இலாப் பெருவாழ்வு காண வகை சொன்னவர்கள் இவர்கள்.

"அன்பே சிவம்" என்ற திருமூலரின் பாடல் நாடறியும். மனம் எனும் பாம்பை அடக்கு என்றவர் பாம்பாட்டிச் சித்தர். போகர் செய்த நவபாஷாண முருகன் சிலையே பழனியில் உள்ளதென்பர். மாமன்னன் இராஜராஜனின் நண்பரே கருவூர்ச் சித்தரென்பர்.

**மருத்துவம்:** வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் சித்தர்கள் தெரிவித்த தமிழ்நாட்டு மருத்துவமுறையே சித்த மருத்துவம். நாட்டு மருத்துவம், பாட்டி வைத்தியம் எனப் பல பெயர்களில் பயிலும் இம்முறை சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பில்லாத ஒன்று.

செவிவழியாக! தாய்வழி மகள் காதுவழி கேட்டுக் கைவழியாகச் செய்யும் இம்மருத்துவம் மிகப் பழமையானது மட்டுமன்றிப் பக்கவிளைவுகள் அற்றது.

நம்மண்ணில் விளையும் தாவரங்களின் இலை, வேர், தண்டு, பூ இவற்றினால் ஆன சூரணமே மூலிகை மருந்து (HERBAL) ஆகும்.

வேதியியல் மருத்துவ ஆதிக்கம் மிக்க ஆங்கில அலோபதி மருத்துவ முறைக்கு மாற்றான இம்முறை, மீண்டும் நோய் வராமல் தடுக்கும் ஆற்றல் மிக்கது. இத்தகைய சித்த மருத்துவமுறை மீண்டும் தமிழகமெங்கும் தழைக்கத் தொடங்கியுள்ளது வரவேற்கத் தக்கது!

சித்தர்கள் மருத்துவ நெறிகளை வகுத்தனர். பதினெட்டுச் சித்தர்களின் பெயரால் பல மருத்துவ நூல்கள் வழங்குகின்றன. இச்சான்றோர்கள் தாம் கண்டறிந்த மூலிகைகளை அவ்வவற்றுக்குரிய மருத்துவப் பயன் கொண்டு, பண்புகள் அடிப்படையில் பெயரிட்டழைத்தனர்.

வாதா மடக்கி, வண்டுகொல்லி, கிரந்தி நாயகன், பொன்னாங் கண்ணி என்பவை இத்தகு பண்புப் பெயர்களே மஞ்சட்காமாலைக்குத் தமிழகத்துக் கீழாநெல்லியே, கண்கண்ட மருந்தாக விளங்குகிறது. சித்தமருத்துவம் தமிழரின் தனிப்பெருஞ் சொத்து. கசாயம், குளிகை, சூரணம், இலேகியம், செந்தூரம் எனப் பலவகை மருந்துகள் உண்டு. இம்மருந்துகள் எளிமை, பழைமை, தட்பவெப்பம் ஆகியன கொண்ட சிறப்புடையன. இவற்றின் நோக்கம், தடுப்பு, தீர்வு ஆற்றல் மீட்பு, ஆயுள் நீட்சி ஆகியன.

நந்தி, சனாதர், சனாநந்தர், சனத் குமாரர், திருமூலர், பதஞ்சலி, அகத்தியர், புலத்தியர், காக புகண்டர், கருவூரார், தன்வந்திரி, சட்டைமுனி, யூகிமுனி, தேரையர் ஆகியோர் பல மருத்துவ நூல்களை இயற்றியுள்ளனர்.

தமிழகஅரசின் "அண்ணா மருத்துவமனை" சென்னை அரும்பாக்கத்தில் இயங்கி வருகிறது. அடையாறில் சித்த முறையை ஒட்டிய மருந்துகள் செய்யப்படுகின்றன.

அலோபதி மருத்துவ சிகிச்சையின் பக்க விளைவுகளினின்றும் மக்களை மடைமாற்றம் செய்ய சித்த மருத்துவத்துறை தன்னாலான பங்கினைத் தற்போது ஆற்றி வருவது அனைவரும் அறிந்ததே!

## இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகளில், தமிழன் அன்றே தலைசிறந்த வெற்றி

"என்று பிறந்தவள் என்றுணராத இயல்பினளாம் எங்கள் தாய்" என்று பாரதி பாடிய தொல் பழந்தமிழில், இன்றைய அறிவியலுக்கான இழைகள் விரவிக்கிடக்கின்றன. அவற்றுள் சில

**அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கும்**
**அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி**
**ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்**
**நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன" – என்பார்**.

மாணிக்கவாசகர், திருவாகத்தின். இப்பாடலடிகள் பண்டைத்தமிழர்களின் விண்ணியல் அறிவை விளக்கம் செய்வனவாம். கணக்கில் அடங்காப் பிரபஞ்சத்தின் விரிவு, உலகம் உருண்டை, பெரு வெடிப்புக் கொள்கை (Big Bang Theory) ஆகியன அன்றே தமிழில் கருக்கொண்டமையை அறியலாம்.

1. "உலகம்" என்ற சொல்லின் வேர் "உலவு" என்பது. இதன் பொருள் பூமி தன்னைத்தானே சுற்றிக்கொண்டு ஞாயிறையும் சுற்றுகிறது என்பதே. "ஞாலம்" என்பதில் உள்ள "ஞால்", "தொங்கு" என்ற பொருளில் பூமி அந்தரமான இயக்கத்தில் உள்ளமையைத் தெளிவுபடுத்தும்.
2. "வறிது நிழைஇய காயம்" என்ற புறப்பாடலடி, வானமண்டலத்தில் காற்றில்லாப் பகுதியைக் குறிக்கிறது.
3. "வலவன் ஏவா வானூதி" என்ற புறத்தொடர், ஓட்டுநர் இல்லாமல் இயங்கும் வான்வழி வாகனத்தைக் குறிக்கும்.
4. கரும்புச்சாறெடுக்கும் எந்திரம், "தீம்பிழி எந்திரம்" ஆகும்.
5. பெருங்கதையில் "அந்தக்கேணியும் எந்திரக் கிணறும்" என்ற அடியின் மூலம், ஆழ்துளைக் கிணறு இருந்தமையை அறியலாம்.
6. பெருங்கதையில் வரும் எந்திர யானை கிரேக்க இதிகாசத்தில், டிராய்போரில் வரும், எந்திரக் குதிரையை ஒத்தது.
7. கனிம அறிவு: "ஐவேறு வனப்பின் ________ நலங்கெழு மணிகளும்" என்ற சிலம்பின் அடிகள், ஐவகை மணிகளும் ஒளிரும் திறனால்

வேறுவேறு பெயர்களில் ஆனால் மூலப்பொருள் ஒன்று என்ற தமிழரின் கனிம அறிவியலை வெளிப்படுத்துகிறது.

8. "அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி" என்ற ஔவையின் கூற்றில் அணுவின் திறமும் கடலியல் செய்திகளும் உள்ளன.
9. "உடம்பார் அழியின் உயிரார் அழிவர்" என்ற திருமந்திரம்; மருத்துவத் துறையின் மகிமையை உணர்த்துகிறது.
10. "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய்" என்ற திருவாசகம் உயிர்களின் கூர்தலறக் கொள்கையினைத் (Theory of Evolution) தெளிவுபடுத்துகிறது.

ஆகத் தமிழர்கள் பண்டுதொட்டே அறிவியலின் துணைகொண்டு பல்வேறு நலங்களிலும் நலம் கண்டுள்ளனர் என்பது தெளிவாகிறது.

"ஆழங்காண வியலாத புதைமணலில் பெருங்கற்களை மேலும் மேலும் போட்டு அவற்றின் மேல் மேலும் கற்களை அடுக்கி ஏதோ ஒருவித இயற்கைக் களிமண் பசையினைக் கொண்டு ஒட்டி மாபெரும் அணையைக் கட்டியது (கல்லணை) தமிழனின் இயற்கை அறிவியல் அறிவு என வியக்கிறார். ஆர்தர் காட்டன். இதே தொழில்நுட்பத் துணைக்கொண்டே அவர் கோதாவரியின் குறுக்கே தௌலீஸ்வரம் அணையைக் கட்டினார்.

விண்ணுயர எழும்பி நிற்கும் தமிழகத்துப் பேராலயங்கள் அனைத்தும் பழந்தமிழ் மக்களின் கட்டுமான அறிவியலைப் படம்காட்டி நிற்கின்றன.

உள்ளுறை, இறைச்சி எனத் தமிழ்ப்புலவர் கடைபிடித்த இலக்கிய உத்திகள் இயற்கைப் பொருட்களின் நுட்பத்தைப் பேசுகின்றன.

கப்பல் கட்டுமானம், சிறு-பெரும் படகுகள் கட்டுதல், அவைகளைக் கடலிற் செலுத்தப் பல்வேறு அயல் நாடுகளுடன் வணிகம் செய்த கடலியற் காற்றுகளின் போக்குகள் பற்றிய அறிவு தமிழனின் செம்மாந்த அறிவியலறிவினைப் பறை சாற்றுகின்றன. தமிழர் மேற்கொண்ட உள்ளூர்த் தொழில்களில் பயன்படுத்திய கருவிகள் அறிவியலின் துணையன்றிக் காணப்பட்டிருக்க இயலாது.

ஆக இன்றைய அறிவியலின் பல்வேறு பிரிவுகளான இயற்பியல், வேதியியல், உயிரியல், தாவரவியல், உலோகவியல், வானியல் என அனைத்திலும் பழந்தமிழர்கள் போதுமான அறிவைப் பெற்றிருந்தனர் என்பதில் எந்தளவுக்கும் இடமில்லை என்பதே தெளிவ!

**திவ்விய ஞானசபை (Theosophical Society) தமிழகத்தில் ஏற்படுத்திய தாக்கம்**

1875இல் பிளாவட்ஸ்கி அம்மையாரும் ஆல்காட் என்பவரும் இணைந்து அமெரிக்காவில் தொடங்கிய இயக்கம் இது. ஆன்மீகம் தத்துவம், பழமையில் புதுமை தேடுதல் என்பன இவ்வியக்கத்தின் தொடக்கத்திற்கான கொள்கைகளாக இருந்தன. இந்தியாவில் இதன் தலைமையகம் மும்பையை இடமாகக் கொண்டு நிறுவப்பட்டது. பின்னர் பல்வேறு காரணங்களால் சென்னை அடையாறுக்கு மாற்றப்பட்டது. இந்திய விடுதலைப் போரில் திறம்படப்பணியாற்றிக் கொண்டிருந்த ஆங்கிலேயப் பெண்மணி அன்னிபெசன்ட் இவ்வியக்கத்தின் தலைவராகப் பொறுப்பேற்று ஐம்பதாண்டுக் காலம் பணியாற்றினார்.

**நோக்கம்:** “வேதங்கள், உபநிடதங்கள், பிரம்ம சூத்திரம், பகவத்கீதை போன்ற வடமொழி சார்ந்த நூல்களைப் பயில்வது, பயிற்றுவிப்பது, சமூகத்திலிருந்து தொடர்பற்றிருக்கும் அவற்றை மீட்டுருவாக்கிப் பிரபலப்படுத்துவது” இவ்வியக்கத்தின் நோக்கமாக இருந்தது. சாதி மத இன மொழி பேதமற்ற வகையில் அனைவரும் இவ்வியக்க உறுப்பினராகிப் பணியாற்ற வாய்ப்பளித்தது இவ்வியக்கம்.

**தடுமாற்றம்:** சமரச நோக்கம் கொண்ட இவ்வியக்கத்தில் பிராமணர்களே பெரும்பாலானவர்களாக இருந்தனர். அந்தணர்கள் மட்டுமே ஓதி வந்த சமஸ்கிருத நூல்களை, அனைத்துச் சமயத்தவரும் ஒருங்கே அமர்ந்து ஓதும் வகையில் மாற்றம் செய்த பெருமை அன்னிபெசன்ட் அவர்களையே சாரும். ஆனால் தமிழகத்தில் கால் கொண்ட இவ்வியக்கத்திற்குக் காலத்தால் அழியாத இறைநெறிப்பாடல்களாம் தேவாரம், திருவாசகம், திருமுறைகள், திருமந்திரம் போன்ற செவ்வியல் (Classical) இறைநூல்கள் கவனத்திற்கே வரவில்லை.

**பழமை வாதம்:** அறிவியற்கல்வி, சிந்தனைப் புரட்சி, முற்போக்கு எண்ணங்கள், சமூக, சமயச் சீர்திருத்தம் ஆகியவற்றிற்கு எதிராகத் தொடங்கப்பட்டது இவ்வியக்கம்.

**விளைவுகள்**

1. வைதீக மதம் உயர்ந்தது என்ற சிந்தனை மக்களிடையே உருவானது.
2. சிலர் துணிந்து மூடநம்பிக்கைகளைப் பரப்பினர்
3. வைதீகர்கள் ஓரணியில் திரண்டனர்
4. அன்னிபெசன்ட் விடுதலைப் போரில் ஈடுபட்டமையால், இவ்வியக்கம் வலுவிழந்து அநாதையானது.
5. தமிழகத்தில் சீர்திருத்த இயக்கங்கள் தோன்ற இவ்வியக்கமும் ஒரு காரணம் எனலாம்.

## தமிழர் பண்பாட்டில் தலைசிறந்து நிற்கும் தஞ்சைப் பெரிய கோயில் சிறப்புகள்

இந்தியக் கட்டடக்கலை, நாகரம், வேசரம், திராவிடம் என்ற மூவகைப் பிரிவுகளைக் கொண்டது. இவற்றில் தஞ்சைப் பெரிய கோயில், எண்பட்டை வடிவிலான கட்டுமான உத்தியைக் கொண்ட திராவிடக் கலைப்பாணியைச் சேர்ந்த ஒன்று.

"செங்கல், சுண்ணாம்பு, மரம், உலோகம் இல்லாமல் பிரம்ம ஈஸ்வர விஷ்ணுக்களுக்கு விசித்திர சித்தன் என அழைக்கப்பட்ட முதலாம் மகேந்திரவர்மன் குடைவரைக் கோயில்களை அமைத்தான்" என மண்டகப்பட்டுக் கல்வெட்டு கூறும் செய்தி அப்படியே தஞ்சைப் பிரகதீஸ்வரர் ஆலயக் கட்டுமானத்திற்குப் பொருந்தும். "கற்றளி" எனப்படும் கற்கோயில் கட்டுமானம் – கருங்கற்களை ஒன்றுடன் ஒன்றடுக்கிக் கட்டப்பட்ட, கி.பி.7ஆம் நூற்றாண்டில் இரண்டாம் நரசிம்மவர்மனால் படைக்கப்பட்ட கலைவடிவம் இது. மாமல்லை, பனைமலை, காஞ்சி கைலாசநாதர் கோயில் என்பனவும் இத்தகைய கற்றளிகளே.

**கட்டுமானம்:** கி.பி. 988இல் மாமன்னன் இராஜராஜன் கொண்ட சேரநாட்டு வெற்றியின் சின்னமே "கேரளாந்தன் கோபுரம்" பதினோராம் நூற்றாண்டில், கி.பி.1003இல் தொடங்கி 1010க்குள்ளாக ஏறத்தாழ எட்டாண்டுகள் ஆயின பெரிய கோயில் திருப்பணிகள் நிறைவுபெற.

13 தளங்களைக் கொண்ட கருவறை விமானத்தின் மேல் எண் பட்டை அமைப்பில். ஆரஞ்சுப்பழச் சுளைகளைப் போன்று எட்டுக்கற்களை நெருக்கி வைத்து ஒட்டப்பட்ட தோற்றம் பிரம்மாண்டமானது.

இந்தியாவின் இரண்டாவது பெரிய நந்தியும், மண்டமும் நாயக்கர்களின் கொடையாகும்.

**இராஜராஜ சோழன்:** 1886இல் ஜெர்மன் அறிஞர் ஷுல்ஸ் என்பார், ஆறாண்டுக் கடின உழைப்புக்குப் பின், கல்வெட்டுகளைப் படியெடுத்து ஆராய்ந்து, இக்கோயிலைக் கட்டியவன் முதலாம் இராஜராஜன் என உறுதி செய்தார்.

1930இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் திரு.S.K.கோவிந்தசாமி பெரிய கோயிலின் கருவறை, விதானம், சுற்றுச்சுவர்களில் வரையப்பட்ட விலை மதிப்பற்ற வேலைப்பாடுகள் கொண்ட ஓவியங்களைக் கண்டு வெளியுலகிற்கு அறிவித்தார்.

**பெரிதினும் பெரிதே**: உலக அதிசயமாம் ஈசா பிரமிடினைப் போல எட்டுமடங்குப் பெரியது, தஞ்சைப் பெருவுடையார் கோயில். விண்முட்டி நிற்கும் கோயிலின் நிழல் தரையில் விழாவண்ணம் கட்டப்பட்ட கட்டுமானம் அது.

யுனஸ்கோவின் பாரம்பரியச் சின்னங்களுள் ஒன்றாகப் பராமரிக்கப்படும் இவ்வாலயம், உலகச் சுற்றுலாத் தலங்களில் முதல் வரிசையில் இருப்பதோடு உலகம் உள்ளவரை, தமிழும் தமிழரும் வாழும் வரை நிமிர்ந்து நிற்கும், திராவிடக்கலைப்பாணிக் கட்டுமானம் எனப் பண்பாட்டில் உயர்ந்து நிற்கிறது!

**புதுச்சேரி ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு**

18ஆம் நூற்றாண்டில் புதுவை, பிரஞ்சு ஆளுநரான துய்ப்ளேயின் உரை பெயர்ப்பாளராக இருந்த ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு கூறும் செய்திகள்.

1. ஒவ்வொரு நாள் நிகழ்வுக்கும் ஆண்டு, மாதம், நாள், கிழமை, நேரம், நிதழ்விடம் உள்ளது. 12 தொகுதிகளாகத் தொகுக்கப்பட்டுள்ளது.
2. பிரெஞ்சு ஆளுநர் டூமாஸ், ஆங்கிலேயரிடமிருந்து நாணயம் அச்சடிக்கும் உரிமை பெற்ற செய்திகள், நாணய மாற்றுகளின் மதிப்புகள்.
3. 1746இல், சென்னையின் உரிமைக்காக ஆற்காடு நவாபின் மக பூஸ்கான் பிரெஞ்சு அரசுக்கு இடையேயான போர்ச் செய்திகள்
4. நீதி வழங்குதல், தண்டனை முறைகள், மரணதண்டனை, காது அறுத்தல், சாட்டையடி, கிட்டங்கில் போடுதல் போன்ற தண்டனைச் செய்திகள்.
5. புதுச்சேரியிலிருந்து கப்பல்கள் கிழக்காசிய நாடுகளுக்குச் சரக்குகளைக் கொண்டு செல்லுதல்.
6. புதுவையிலிருந்து மணிலா சென்ற கப்பலில், அழகப்பன் என்ற தமிழர் மாலுமியாகச் சென்றது.
7. புதுச்சேரிப் பிறைவராகன், சென்னை நட்சத்திர வராகன், வட்டவராகன், ஆரண வராகன், பரங்கிப் பேட்டை வராகன் பற்றிய நாணயங்கள் பற்றிய செய்திகள்.
8. 1736, செப்.5 முதல் 1761. ஜன.11 வரையிலான செய்திகள்
9. 1745இல் புதுச்சேரியில் சூறைக்காற்றால் வெள்ளம், மனிதர்கள், கால் நடைகள் அழிவு.

நாமறிந்த வரையில் 18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆனந்த ரங்கர் தனது 24 ஆண்டுகால நாட்குறிப்பு ஏடுகளில் தென்னிந்திய வரலாறு-பண்பாடு பற்றிய செய்திகளைத் தருவதோடு, அக்காலத்திய – பிரெஞ்சு, பிரிட்டிஷார் பற்றிய ஆவணங்களையும் தந்திருக்கிறார். என்றே கொள்ள வேண்டும்.

வல்லாண்மை மிக்க ஃபிரெஞ்சு ஆட்சியரின் நம்பிக்கைக்கு உரியவராகப் பணியாற்றியவர், ஆனந்த ரங்கர்.

அரசியற் செய்திகள், சமூகச் செய்திகள் இயற்கைப் பேரிடர்ப் பதிவுகள், ஆங்கிலேயர் – ஃபிரெஞ்சுக்காரரர் போர்கள் என அவர் பதிவிட்ட அனைத்தும் மாபெரும் வரலாற்று நூலுக்குச் சமம்.

"அந்தக் காலத்தில் நடந்த செய்திகள் எல்லாவற்றையும் முக்கியமானது – முக்கியமில்லாதது என்று கூடக் கவனிக்காமல் ஒன்று தவறாமல் சிந்திரகுப்தன் எழுதி வரும் பதிவைப் போல நல்ல பாஷையில் அன்றாடம் விஸ்தாரமாக எழுதி வைத்திருக்கிறார் ஆனந்த ரங்கர் எனகிறார்" வ.வே.சு. அய்யர்.

தன்மீது குற்றச்சாட்டு கூறப்பட்ட போதும் கூட ஆளுநராக இருந்த "லெறி" என்பாரிடம், "இப்பட்டணத்தில் உம் அதிகாரம்தான் இறுதியானது. என்னைக் காவலில் போட விரும்பினால் உடனே செய்யலாம், பிற தண்டனையும் வழங்கலாம். இரண்டு சல்லிக்காசு கூட நான் செலுத்த மாட்டேன். சிறையில் அடைத்து விடுவீர் எனப் பயந்து ஒருவாரத்தில் பணம் தருவேன் என நீர் கருத வேண்டாம்" என்ற அவரது நெஞ்சுரமும் நேர்மையும் தமிழனை உயர்த்திய பதிவாகும்.

ஆனந்தரங்கர் கோவை, அனந்தரங்கன் பிள்ளைத் தமிழ், வானம் வசப்படும் (பிரபஞ்சனின் நாவல்) ஆகியன ஆனந்த ரங்கரைப் பற்றிய மெய்மைப் பதிவுகளாகும்.

**தேசிய இயக்கங்களால் தமிழகம் பெற்ற பயன்கள்**

மூன்றாம் நூற்றாண்டு தொடங்கி ஒன்பதாம் நூற்றாண்டு வரையிலும், பின்னர் கி.பி.13 தொடங்கி 20ஆம் நூற்றாண்டு வரையிலும் தமிழகம் அயலகமாக மாறித் தன்னிலை தாழ்ந்திருந்தது. ஆலயங்களில் வடமொழி, அரசிலே உருது, அரபு, தெலுங்கு, மராத்தி, ஆங்கிலம் கோலோச்சின. புலவர்களும் அரசர், செல்வந்தர்களை நாடி வெகுமதி வாழ்க்கை நடத்தினர்.

**வெகுண்டெழுந்த பாரதி:** வேறு வேறு பாஷைகள் கற்பாய், நீ வீட்டு வார்த்தை கற்கிலாய்" என்று சபித்தார் பாரதி. தமது நண்பர் பரலி.சு.நெல்லையப்பருக்கு எழுதிய கடிதத்தில் "தமிழ், தமிழ், தமிழ் என்று எப்போதும் தமிழை வளர்ப்பதே கடமையாகக் கொள்க" என்று மனம் வருந்தி எழுதுகிறார். தமிழரின் வாழ்வில் தமிழ், எங்கும் எதிலும் என்ற நிலைவரப் பேரவாக் கொண்டார்.

**சுப்பிரமணிய சிவா:** பாரதி வ.உ.சி. இவர்களுடன் இணைந்து தமிழ் நாடுதோறும் சென்று அரசியல், சமய, இலக்கிய மேடைகளில் தமிழ் முழக்கம் செய்து அடிமையாக இருந்த தமிழர்களை ஆங்கில ஆட்சிக்கெதிராக வெகுண்டெழச் செய்தார் இவர்.

**வ.வே.சு.ஐயர்**: மேலைநாட்டுக்கல்வி, புரட்சிக்காரர் என மாறிப் பன்மொழியறிவு பெற்றுப் "பாலபாரதி" ஏடு தொடங்கித் தாம் கற்ற மொழித் திறமையைத் தமிழின் உயர்வுக்காகப் பயன்படுத்தினார் இவர். தமிழின் முதல் சிறுகதை ஆசிரியர் இவரே.

**பரலி சு. நெல்லையப்பர்:** பாரதியின் இந்தியா, விஜயா, ஞானபாநு, ஐயரின் பாலபாரதி, திரு.வி.க.வின் தேசபக்தன், நவசக்தி ஏடுகள் எனத் தமிழில் எழுதிக்குவித்து மொழி வளம் பெறத் தொண்டாற்றியவர் பாரதியின் உடன்பிறவாத் தம்பியான நெல்லையப்பர்.

**வ.உ.சி.:** செல்வக்குடும்பத்துச் சீராளர், வழக்கறிஞர், எழுத்தும் பேச்சுக்கலையும் கைவரப்பெற்ற ஏந்தல் சிதம்பரனார் அடிமை வாழ்வுக்கெதிராக வீறுகொண்டு, சிறைப்பட்டார்; செக்கிழுத்தார். சுதேசி நாவாய்ச் சங்கம் தொடங்கித் தமிழரின் பழம் பெருமையை மீட்டார்.

**நாமக்கல் கவிஞரும் கவிமணியும்:** "தமிழனென்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா" என்று தமிழரைத் தட்டியெழுப்பினார். வெ.இராமலிங்கனார். காந்தியக் கவிஞர்களில் இன்னொருவர் கவிமணி தேசிக விநாயகனார். இருவரும் இணைந்து காந்தியக் கொள்கைகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து தேசியம், தமிழியம் எனத் தமிழர்களை உணர்வு கொள்ளச் செய்தனர்.

**தமிழிசை:** அந்நிய மொழிகள் ஆதிக்கம் செலுத்தி வந்த தமிழக இசை மேடைகளில், தீரர் சத்தியமூர்த்தி, நாவலர் சோமசுந்தர பாரதியார், ராஜாஜி, கல்கி, அண்ணா, தெ.பொ.மீ. ஆகியோருடன் இணைந்து ராஜா சர் அண்ணாமலையார் 1941இல் தொடங்கிய தமிழிசை இயக்கம் தேசியத்தின் விளைவே ஆகும்.

**எழுத்திலும் பேச்சிலும் :** திரு.வி.க. கல்கி, தெ.பொ.கிருஷ்ணசாமிப் பாவலர், விசுவநாத தாஸ், டி.கே.எஸ். சகோதரர்கள் என எழுத்து, நாடகம் எனத் தமிழ் மக்கள் புதிய பாதையில் நடை பயின்றனர். எஸ்.ஜி.கிட்டப்பா – கே.பி.எஸ்.தம்பதிகள் தங்கள் கம்பீரக் குரலால் தமிழ் பாடிக் கதரையும் காந்தி குல்லாயையும் தமிழகமெங்கும் பிரபல்யம் செய்தனர்.

**இதழியல் வழியாக:** திரு.வி.க., டாக்டர் வரதராஜுலு நாயுடு, வ.ரா., டி.எஸ்.சொக்கலிங்கம், ஸ்டாலின் சீனிவாசன், கல்கி, தினமணி, ஆனந்த விகடன் எனத் தமிழ் இதழியல் மிகக் குறுகிய கால கட்டத்தில் உச்சம் தொட்டது.

ஆக, "தேசியத்தால் தமிழ் வளர்ந்தது; தமிழால் தேசியம் வளர்ந்தது; வளமான தமிழகம்; வலிமையான பாரதம்" எனத் தமிழன்னை தலை நிமிர்ந்தாள்!

"தமிழைவிட இன்னொரு பாஷை சுகமாக இருப்பதைப் பார்க்கும் போது எனக்கு வருத்தமுண்டாகிறது" எனத் தன் நண்பர் பரலி சு. நெல்லையப்பருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடும் மகாகவி பராதிதான் "ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டடோமென்று" என்று ஆனந்தக் கூத்தாடினார்.

வெள்ளையரின் நீதிமன்றத்தில். "சிவமும் சிதம்பரமும் என்னிரு கண்கள்" என்று அஞ்சாமல் சாட்சியம் அளித்த மகாவீரன் அவன். அரசியல், சமயம், சமூகம், பெண்ணியம், சாதியம் பற்றிய அவரது படைப்புகள் தமிழ்த்தேசிய இலக்கியத்தின் முன்னுரை. "சுப்பிரமணிய சிவா" வின் "ஞானபந்து" மாதவிதழ் மற்றுமோர் தேசிய இலக்கியம்.

மேனாட்டுக் கல்வியைத் தேடிச் சென்று, புரட்சியாளராக மாறிப் பாரத்தின் விடுதலைக்குப் போராடிய வ.வே.சு. ஐயர் நடத்திய "பால பாரதி" என்ற திங்களிதழ் கம்பனை ஆராய்ந்து, தேசம்-தமிழ் இரண்டையும் வளர்த்தது. பன்மொழிகள் அறிந்த போதும் தமிழே உயர்வெனப் பேசினார்.

பரலியாரின் தமிழ்ப்பணி, தமிழைத் தேசியப்படுத்தியது. இந்தியா, ஞானபானு, பாலாபாரதி, தேசபக்தன், நவசக்தி, தனது வாரஇதழ் லோகோபகாரி என அவரின் கவிதை, கட்டுரை, பேச்சு என்ற அனைத்துப் படைப்புகளாலும் நிறைந்து தமிழைத் தேசியத்தோடு இரண்டற இணைத்தது.

தனது வாழ்க்கையையே தீயாகத்தீயில் புடமிட்ட தங்கமாக ஆக்கிய வ.உ.சி. அவர்களின் இலக்கியப் பணியும் தமிழ்ப் பற்றும் தமிழைத் தேசியத்திற்கு இட்டுச் சென்றன.

உப்பு அறப்போர்ப் பாடலியற்றித் தமிழில் காந்தியக் கவிஞரான நாமக்கல்லார், கவிமணி, "தமிழ்நாடு" நாளிதழ் டாக்டர் வரதராஜலு, T.S.சொக்கலிங்கம், வ.ரா., கல்கி, ஆனந்த விகடன், தினமணி, தி ஹிண்டு, ஜீவா, திரு.வி.க. என எங்கு நோக்கினும் தமிழும் தேசியமும் இழைந்தோடின.

**வினாக்கள்**

1. இடைகால தமிழ் சமுதாயத்தில் தேவதாசி முறையை வெளிப்படுத்துக.
2. உத்திரமேரூர் கல்வெட்டு கூறும் குடவோலைத் தேர்தல் முறைகள் – தகுதிகள் குறித்து எழுதுக.